339

Registered No. M. 2445

17 JUL 1931

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் ௧ | சுக்கில ஆண்டு சித்திரைத்திங்கள் 1929 — எப்ரல். | இதழ் ௪

௧. காலத்தின் அருமையும் நமது கடமையும் :—
௨. ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீன பீடமும் அதன் பெருமையும் :—
௩. வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும், அவற்றின் தொன்மையும் :—
௪. சிவப்பிரகாச சுவாமிகளும் அவர்நூல்களும் :—
௫. வீரசைவம் :—
௬. அட்டாபரணம் :—
௭. உண்மையுணர்வு :—
௮. தென்னாட்டு நிகழ்ச்சிகள் :—
௯. அபிஷேகமாலையுரை :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரய்யர்,
'வீரசைவநிலையம்' முசிறி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த

மகாசங்கம்.

பெரியோர்களே!

புதுப்பேட்டை, திருவாளர் S. A. ருத்திரப்பா அவர்கள் கடிதத்தாலும், பத்திரிகைகளாலும் பம்பாய் மாகாணத்தில் பெல்காம் ஜில்லா சாவளிகை என்னும் நகரில் ஸ்ரீ சிவயோகி சித்தலிங்க சுவாமிகளால் மே-மீ 1, 2, 3-உகளில் **அகிலபாரத வீரசைவ மகாசங்கத்தை** நடத்த முயற்சிக்கப்பெறுவதாகத் தெரியவருகிறது. இதன் உறுதியான விளம்பரத்தை யெதிர்பார்த்துப்பின்னர் மேமாதக்கடைசியிலாவது நமது மாகாண மகாசங்கத்தை நடத்த நாள் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வருடம் பெரம்பலூர் தாலூகா வெங்கைமாநகரத்தில் நடத்தலாமா எனவும் அவ்வட்டகையார் கருதுகின்றார்கள். வேறிடங்களில் நடத்த அபிப்பிராயமுடையவர்களும் தெரிவிக்கலாம். எங்ஙனமாயினும் இப்பரபரப்பான காலத்தில் நமது மகாசங்கத்தை நடாத்த நாம் பின்வாங்கலாகாது. இவ்வருடத்தில் சென்னை புதிய சட்டசபைத் தேர்தல் நடைபெறப்போகிறது. அதில் வீரசைவர்களில் ஒருவரை உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கவும், உரிமைபெறவும் மாட்சிமிக்க கவர்ன்மெண்டாரை வேண்டிக்கொள்ளுதல்வேண்டும் வீரசைவரனைவரும் ஒருங்கே கூடுதல்வேண்டும். இனிச் சிறிதும் உறங்குதல்கூடாது விழித்தல்வேண்டும். பொறுப்பாளர்கள் அனைவரும் தயைசெய்து இன்றே தொடங்கி சந்தாவை வசூலித்தல்வேண்டும். உறுப்பினர்களும் தமது சந்தாவைக்கொடுத்து ஊக்கமளித்தல்வேண்டும். பல்லாரி ஜில்லா வீரசைவர்கள் பெரிதும் முயல்கின்றார்கள். தமிழ்நாட்டு வீரசைவர்களே! முந்துங்கள்! முந்துங்கள்! காலத்தின் முற்போக்கைக் கருதுங்கள்! நமது, உரிமையைப் பெறுதற்கு ஏற்றகாலம் இதுவே. ஆங்காங்கு பலர் முயற்சித்தல் வேண்டும். இவ்வரிய முயற்சியில் வீரசைவரனைவரும் தம்கடமையைச் செய்தல் வேண்டுமென இக்கழகத்தார் மன்றாடி வேண்டுகின்றார்கள். இங்ஙனம்,

காரியதரிசி.

சந்தா விரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :—	...	25—0—0
ஆண்டுச் சந்தா :—	...	2—0—0
மாணவர்கட்கு :—	...	1—8—0
தனியிதழ் :—	....	0—4—0

17 JUL 1931

உ

சிவமயம்.

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள்.

அருந்து மமுதி னினியதா யன்போ டளைந்து படிறிலதா
யறைந்த மொழிதத் துவமசியி னன்றி மாறு வியல்பினதாய்ப்
பொருந்து மறையா முடம்பிற்குப் புக்க வுயிராய்ப் பவக்கடற்குப்
புணையாய்க் கயிலை வழித்துணையாய்ப் பொலிந்த திருவஞ் செழுத்
பாந்த புகழ்மந் திரவேந்து பவனி போதுந் திருமறுகாய்ப் [தென்னும்
பனிவெண் டிங்கட் சடைமுடியோன் படிவ முணர்த்தும் விளக்காகித்
திருந்து பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே
திளைக்குங் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே.

ஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று
வருஞ் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க	சுக்கிலஆண்டு சித்திரைத்திங்கள் 1929 — ஏப்ரல்.	இதழ் ச

காலத்தின் அருமையும் நமது கடமையும்.

விநாயகர்.

சுரகு லாதிபன் றாய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்.

வசவேசர்.

வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

மாண்புமிக்க பெரியோர்களே!

காலத்தின் அருமையும் நமது கடமையும் என்னுந்தலைப்பின் கண் ௩-வது இதழில் எழுதப்பெற்ற கட்டுரைக் கருத்துக்களை நேயர்களனைவரும் அறிந்திருப்பார்கள். இன்னும் நமது பொன்போற் போற்றத்தகும் காலம் என்னும் அரும்பொருள் மிகவிரைவில் கழிந்து வருவதை நமக்கு ஞாபகப்படுத்துவான்வேண்டி,

" தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்—ஆற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்" என ஓர் பெரியார்

கூறியுள்ளார். இதன்கருத்தை ஆராயுங்கால், நமது ஆயுளைக்கூறு

படுத்துங் காரணத்தால் கூற்றுவன் என்னும் இயமன் யாரும் எளிதிற் காணும்படி உயர்ந்ததோர் ஆகாயத்தின்கண் காணப்படும் சூரியனை நாழியென்னும் அளவுகருவியாகக்கொண்டு, நாள்தோறுந் தவறாது உங்கள் ஆயுள் என்னும் பொருளை அளந்தளந்து உண்கின்றான்; ஆதலின் உலகத்திற் பிறந்தும் பிறவாதவராக எண்ணப்படும் பேதையரைப்போல் காலக்கழிவுசெய்யாது எல்லோரும் மிகுதியாக அறத்தைச்செய்து அருளுடையீர் ஆகுக என்பது இதன் திரண்ட உபதேசமாகும்.

"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு" எனத் தொழில்செய்து

பொருள் தேடாதவர்க்கு இவ்வுலகவின்பம் கைகூடாததுபோல அறஞ்செய்து அருள்தேடாதவர்க்கு மறுமை யுலகத்தின்பம் இல்லையென்று "அறஞ்செய் தருளுடையீராகுமின்" என்னுங் கருத்தை உதாரணங் காட்டித் திருவள்ளுவராகிய எம்மடிகளும் விளக்குவாராயினர். எனவே அறஞ்செய்தலாவது எப்படி? அருளுடையோராதல் எங்ஙனம்? என ஆராய்வோமாயின் "இம்மைச்செய்தது மறுமைக்கா மெனும் அறம் விலைவாணிகனாய் நில்லாது இறைவன் நமக்குக் கிடைத்தற்கரிய மனிதப்பிறவியையும், அறிவையும், ஆற்றலையும், செல்வாக்கையுந்தந்தது, நம்மோடொத்தமக்களை அறிவாலும் ஆற்றலாலும் உயர்ந்த நிலைக்குக்கொண்டுவரத்தக்க உலகியலுக்கேற்ற பொதுநலங்களைச் செய்தலே நமது கடமையென வுணர்ந்து பயன்கருதாது செய்வதே அறமெனப்படும்; அவ்வறஞ்செய்வோரே அருளுடையராவர் என அறிகின்றோம். இனி உலகியற்கு வேண்டிய அறங்களாவன:— கல்வியிலும், பொருளீட்டற்குரிய தொழின் முறையிலும், சமயாபிமான உணர்ச்சியிலும், தன்மதிப்புப் பெறுதலிலும் யாவரும் முன்னேற்றமடைதற்குரிய அருஞ்செயல்களும் பிறவுமாம்.

வீரசைவ சித்தாந்த சிகாமணியாகிய பெரியோர்களே!

கல்விமுறை:— நந்தமிழ் நாட்டில் வீரசைவர்களனைவரும் ஆரம்பபாடசாலை யுபாத்தியாயர்களாக இருத்தலினாலும், கிராமங்களில் வசிப்பதனாலும் உலகியலின் முற்போக்கை யறியாது கல்வியில் முன்னேற்றமடைந்திருப்பதாகவே கருதுகின்றனர். முற்காலத்திலிருந்த புலவர்களைப்போலத் தமிழிலாவது பண்டித பரீக்ஷை வித்துவான் பரீக்ஷைகளிற்றேறி எத்துணைப்பேர் இருக்கின்றார்கள்? ஆங்கிலப்படிப்

யில் தேறி பி. எ. பட்டம்பெற்றவர் சேலம் ஜில்லாவிலன்றி திருச்சிராப்பள்ளி தஞ்சை முதலிய ஜில்லாக்களில் ஒருவரையேனும் காட்டுதற்கு வழியுண்டா? அல்லது முன்னோரைப்போல சமஸ்கிருதபாஷைபயின்று ஆகம சாஸ்திரங்களில் வல்லாரை இலைமறை காய்போலிருக்கும் இரண்டொருவரையன்றிச் சிலரைக்காட்ட ஏதுவுண்டா? இவையின்றேனும் கன்னடமொழிபயின்றுவது வடநாட்டாருடன் பயின்று நமது குறைகளைத் தெரிவித்துப் பழகுவதற்குச் சில தலைவர்களாவது முன்னுக்குவர இடமுண்டா? உலகத்தார் அடைந்துவரும் முன்னேற்றத்தைக் கருதிப்பார்ப்போமானால் நமது சமூகத்தின் நிலைமை மிகவும் இரங்கத்தக்க தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றதே! பண்டைக் காலத்தில் சீருஞ் சிறப்பும் பெற்றிருந்த நம்மவர் இக்காலத்தில் முன்னேற்றமடையாதிருப்பதைக்கண்டும் நம்மரபினரும் மடாதிபதிகளும் தமக்குக் கிடைத்த சிறிது பொருளையும் செல்வாக்கையும் கல்வியின் முன்னேற்றத்தில் பயன்படுத்தாமலிருந் துறங்குவது அன்னவர்க்கழகாகுமா? இனிப் பலபடப்பேசுவதால் யாதுபயன்? வீரசைவர்கள் தமக்குக் கிடைத்த பொருள் சிறிதாயினும் அதனை யிறுகப்பிடியாது செலவிட்டுதம்மக்களுள் சிலவருடங்களில் சிலராவது **பி. எ. முதலிய பட்டம்பெற்று** முன்னுக்குவர முயல்தல்வேண்டும். இன்னுங் கிராமவாசஞ் செய்வதாலேயே படிப்பிற்குக் குறைவு நேருகின்றமையால் கூடியவரை ஏதேனும் ஒருதொழிலை மேற்கொண்டு நகரங்களில் வசித்து மாணவர்களைக் கல்விபயிலச்செய்தல்வேண்டும். உபகாரச் சம்பளங் கிடைக்காவிட்டாலும் **மதுரைத் தமிழ்ச்சங்கம், சிதம்பரம் தமிழ்க்காலேஜ்** முதலியவைகளில் இருந்தாயினும் தம்மக்களைப் பயிலச்செய்யவேண்டும். இளமையில் ஆரம்ப பாடம்படிக்கத் தொடங்குங்கால் ஒவ்வொருவரும் கன்னடபாஷையில் அக்ஷராப்பியாசஞ்செய்வித்தல்வேண்டும். இது வடநாட்டுக் கலாசாலைகளில் படிப்பதற்கும் அவர்களுடன் பழகுவதற்கும் சாதகமாகும். மடாதிபதிகளும், சரமூர்த்திகளும் இயன்றவாறு சிலரையாவது படிப்பித்தல்வேண்டும்; படிப்பதற்குப் பொருள்தேடித் தருதல்வேண்டும். இவ்வின்றியமையாத நன்றியில் யாவருக்கும் ஊக்கமுண்டாக இறைவன் அருள்புரிவாராக.

(தொடரும்)

ஸ்ரீ போம்மபுரம்

சிவஞானபாலய தேசிகராதீன பீடமும் அதன் பெருமையும்.

(முன் தொடர்ச்சி)

முதல் தாபகர், ஸ்ரீ சிவஞானபாலசித்தர்.

மகா கைலாயத்தின்கண் சிவபெருமானுடைய சந்நிதானத்தில் சிவானந்தத் தேன்பருகி யின்புற்றிருக்கும் சிவகணங்கட்குத் தலைவராக விளங்குபவர் **சங்குகன்னர்.** உலகத்தின்கண் வைதீக சைவநெறியாகிய ஒழுக்கங்கள் குன்றியகாலத்தில் இறைவரது ஆணையால் கணநாதர்களுள் ஒருவர் அவதாரஞ்செய்து அவ்வொழுக்கங்களை நிலைபெறச்செய்வரென்பதை வேதசிவாகம வுணர்ச்சியுடையார் யாரும் மறுக்கார். காரணமின்றிக் காரியம் நிகழ்தலின்மையின், சிவபெருமான் நீராடச்சென்ற உமாதேவியாரது கட்டளையை மேற்கொண்டு நின்ற சங்குகன்னர்க்கு அக்கட்டளையைத் தமக்குணர்த்தாது விடுத்த காரணத்தால் நிலவுலகிற்றோன்றி, மாறுபட்ட கொள்கையிற்புக்க மக்களைச் சிவாகமநெறியிற் புகும்படிப் பண்புடையராக்கி, முருகப் பெருமானது அருளால் உமது நிலையை அடைவீர்எனக் கட்டளையிட்டனர். இறைவரது கட்டளையை மேற்கொண்ட சங்குகன்னர் கருவுற்றுப் பிறவாது சடையையும், குண்டலங்களையும், விபூதி ருத்திராக்கங்களையும், இலிங்கதாரணத்தையும் அஞ்செழுத்தை யகலாதுச்சரிக்கு நாவையும் உடையராய்ப் பத்துவயதுடைய மானுடத் திருமேனிதாங்கி மயூராசலத்தை யடுத்த கீழைச் சமுத்திரத்திலே தோன்றி அக்கடற்கரையின்கண் இவ்வீரசைவ பீடத்தைத் தாபித்துப் பெருமுக்கன்மலை முதலிய இடங்களிற்சென்று முனிவர் பலர்க்கு ஞானோபதேசம்புரிந்து மீண்டும் இப்பீடத்தின்கண் தங்குவராயினர். பாலவயதுடன் கடலிற்றோன்றிச் சித்தராயிருந்தமையின் **பாலசித்தர்** என்னும் திருப்பெயர் வழங்குவதாயிற்று.

பாலசித்தர் பின்னர் மயூராசலத்தையடைந்து நீண்டகாலம் தவயோக சமாதியிலிருந்து தம்பால் கன்னிப்பருவமுடையராகவந்த வள்ளிதேவநாயகியாரைப் புத்திரியாகப்பாதுகாத்து, இளைஞராகவந்து

போர்புரிந்த முருகப்பெருமானுக்கு அக்கன்னியர்களை மணஞ்செய்வித்து, அம்மலையிலேயிருந்து என்றும் யாவர்க்கும் அருள்புரியுமாறு வேண்டிப் பின்னர் பற்பல விடங்களில் பலர்க்கும் ஞானோபதேசஞ் செய்து, வீரசைவ சமயத்தை நிலைநாட்டி, மீண்டுந் தமது பீடத்தை யடைந்து, தோன்றாத் துணையாக விளங்கும் முருகப்பெருமானது அருளைப்பெற்றுச், சிவஞானத்தை யுபதேசித்துவந்தமையால் சிவ ஞானபால சித்தர் என விளங்கிவந்தனர். இவர் தமது பாற்பிரசாதத்தால்உதித்த சிவஞான தேசிகருக்கு ஆசாரியாபிடேகஞ்செய்வித்து மயூராசலத்தையடைந்து முருகப்பெருமானது சந்நிதானத்தின் தென்பாலுள்ளதும், திருமணத்திற்கெழுந்தசிவபெருமானால் கொடுக்கப்பெற்றதும் ஆகிய சிலலிங்கமயமாயினர். இவர் சித்தராகவே சுமார் ஆயிரம் வருடங்களாக இவ்வுலகில் இருந்தனர் என்பர்.

2-வது சிவஞானதேசிக சிவாசாரிய சுவாமிகள்.

இவர் சிதம்பரத்தில் பச்சகந்தர் மரபிலே புத்திரப்பேறின்றி வருந்திய அம்மவ்வை யென்றழைக்கப்பெறும் கற்பிற்சிறந்த அம்மையார் பெருமுக்கன்மலையிற் சித்தராக விளங்கிய க-வது பாலசித்தர்பால் தங்கணவருடன்சென்று கள்ளிப்பால் கறந்துகொடுத்து உபசரித்து அப்பாலசித்தப் பெருமானருளிய பால்பிரசாதசேடத்தையுண்டு கருவுற்றுப்பெற, அவ்வம்மையாரின் தவப்புதல்வராக அவதாரஞ் செய்தனர். இவர் பாலசித்தரின் வேண்டுகோளால் முருகப்பெருமானாலேயே ஆசாரியாபிடேகஞ்செய்விக்கப்பெற்று சிவஞான தேசிகரெனத் திருப்பெயர் சூட்டப்பெற்று பிரமநிலையுணர்த்தும் முனிவர்பெருமானாகவிளங்கிவந்தனர். இவர்வீற்றிருந்தருளிய வீரசைவபீடமுள்ள இடத்திற்குப் பிரமபுரமெனவும், பாலசித்தர் மடம் எனவும் பெயர் கொடுக்கப்பெற்றது. இந்த ஆசாரிய சுவாமிகள் காஞ்சீபுரம் முதலிய இடங்கட்கு எழுந்தருளித் தமது அற்புதச்செயல்களால் ஆங்காங்குள்ள அரசர்களைச் சைவர்களாக்கி அவர்களால் மடமுதலியவை களைக்கட்டுவித்தார்கள். இவர்கள் ஐந்நூறுவருடம் பாலைமட்டிலும் உணவாகக்கொண்டு சிவயோகியாக விளங்கியிருந்தார்கள் என்பர். இவர்களை ஞானாசிரியராகப்பெற்று இவர்கள் காலத்து உடனிருந்து தமிழுலகத்திற்கும் வீரசைவசமயத்திற்கும் பேருதவிபுரிந்துவந்த புலவர் பெருமானாகிய சிவப்பிரகாச சுவாமிகள் இவர்கள்காலத்தும் பிற்காலத்தும் சிவஞானபாலையசுவாமிகள்தாலாட்டு, நெஞ்சுவிடுதூது,

திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், கலம்பகம் என்னும் ஐந்து சிறந்த பிரபந்தங்களைச் செய்துள்ளார்கள். இப்பிரபந்தங்கள் ஆராயுந்தோறும் ஆராய்வார் அறிவிற்கேற்ப பல நயங்களைப் புதிது புதிதாகக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இப்பாடல்களில் சிவஞான தேசிக சிவாசாரியருடைய அற்புதச்செயல்கள் வரலாறுகள் முதலியன கூறப்பட்டுள்ளன.

சிவஞானபாலையதேசிகர் பிள்ளைத்தமிழ்.

செங்கீரைப்பருவம் - 6.

"மெய்தயங் கரிசனம் பூசிவெங் நீராட்டி
விழியூதி மெய்துடைத்து
விரனிலங் தைவங் திடும்பொட்டின் மீதுலையின்
வெண்ணீ றணிக்துவிழியின்
மைதயங் குறவெழுதி யியல்பாகு மக்கவணி
வடமணிங் தம்பொனரைஞாண்
மணியரிக் கிண்கிணி சதங்கைபொற் றண்டைகள்
வனைந்துபொற் றொட்டிலுய்த்தே
யெய்தவங் துறுபெருஞ் செல்வமே! பழையாத
வின்சுவைத் தெள்ளமுதமே!
யென்னுயிர்த் துணையாய மாணிக்க மதலையே!
யென்றுசீ ராட்டியன்பால்
செய்தவம் பெருகும் அம்மவை வளர்க் குங்குழவி
செங்கீரை யாடியருளே
திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ
செங்கீரை யாடியருளே"

இதனுல் அம்மவை வளர்க்க வளர்ந்தாரென்பதும்,

ஷை கலம்பகம் - 50.

"வாரியங் கரையீர் வாளிலைக் கைதை
மலரெனத் தோன்றுவர் சிலர்தாம்
மதுரவீர்ங் கரும்பின் மலரெனச் சிலர்தாம்
வருவர்நீ கற்பக மலர்போல்
காரியங் களத்த னடஞ்செய்தா மரையின்
கழலொலி யாவுமூர் போகிக்

கண்களாற் கண்டு கேட்குமூர்ப் பச்சைக்
கந்தமா முனிகரத் துதித்தாய்
வேரியங் கமலத் தாளிழை மருங்குன்
மெல்லியற் பெண்ணொரு கம்ப
மேவுற விருமா தங்கமுங் கட்டி
விடாதமர் நகர்கணு யகமும்
பாரினன் முகமா மிக்கரை முனிந்த
பரன் றிருவக்கரை நகரும்
பயிலிட மெனக்கொண் மயிலைவா ழமுத
பானமார் ஞானமா தவனே ''

இதனுள் 'நடராஜப்பெருமானது குஞ்சித நடனபாதத்தையும் சிலம்பொலியையும் கண்டு கேட்கும் ஊர், என்பது சிதம்பரம்; எனவே கண்டு கேட்கும் ஊர் பச்சைகந்தமாமுனி கரத்துதித்தாய் என்பதனால் சிதம்பரத்திலிருந்த முனிவராகிய பச்சைகந்தர் மரபிற்றோன்றியவர் என்பதும், நகர்கள் நாயகம், திருவக்கரை, மயிலை என்பதனால் காஞ்சி திருவக்கரை மயிலம் என்ற இடங்களில் மடாலங்கட்டி வாழ்ந்தனர் என்பதும், அமுதபானமார் என்பதனால் பாலையே உணவாகக் கொண்டிருந்தனர் என்பதும், ஈர்வாள் இலைக் கைதைமலரெனத்தோன்றுவர் சிலரென்பதனால் ஈருகின்ற முள்ளிலையுடைய காரணத்தால் பிறர் அணுக முடியாத தாழைமரத்தின்மேல் மணமுடையமலர் இருப்பதுபோல் சிலர் பிறப்புவகையாற் றாழ்ந்து அறிவுவகையால் உயர்ந்திருப்பர் எனவும், கரும்பின் மலரெனச் சிலர்தாம் வருவர் என்பதனால் கருப்பு இனிமையுடையதாயிருந்தும் அதன்மலர் மணமின்றியிருப்பதுபோலச் சிலர் உயர்குடியிற்பிறந்தும் கல்வியறிவின்மையால் தாழ்ந்திருப்பர் எனவும், இடம் நிழல் பூ காய் கனி முதலிய எல்லாவற்றாலும் பயன்படுகின்ற கற்பகம்போலச் சிவஞானதேசிகரோ காணமுத்தியளிக்கும் சிதம்பரத்திலுள்ள பச்சகந்தரது உயர்ந்த மரபிற்றோன்றியும் அறிவு குணஞ் செயல்களால் உயர்ந்தவராகவும் விளங்குகின்றார் என்பதும் விளங்க நயம்பட வுரைத்திருக்கின்றனர். பரம்பரை வீரசைவ மரபிற்றோன்றியவர்களே இம்மடாலயத்தின் தலைவர்களாக அமர்ந்து இம்மகாபீடத்தை இதுவரை அணிபெற விளங்கச்செய்துவருகின்றார்கள். இதன்சம்பந்தமாகப் புதைபட்டிருந்த கல்வெட்டொன்று முருகப்பெருமானது அருளால் கிடைத்திருக்கின்றது. (தொடரும்)

வீரசைவ பஞ்சாசாரிய பீடங்களும் அவற்றின் தோன்மையும்.

4-வது ஸ்ரீசைல சமஸ்தானம்.

இந்த பீடம் கர்நூல்ஜில்லா நந்திகோடகூரம் தாலூகாவின் வாயுமூலையில் பயங்கரமான ஆரணியத்தின் இடையிலுள்ள சாலாமலி பருவதத்தின் ஓர் கிளையிலுள்ளது. மடாலயம் இருக்கிற நாகலூடக் கிராமத்திற்கும் மல்லிகார்ச்சுன தேவாலயமிருக்கின்ற பர்வதசிகரத்திற்கும் 25 மைலுள்ள காட்டுவழி ஒன்று இருக்கின்றது. நாகலூடக் கிராமத்தின் சுற்றுப்புறத்திலும், பர்வதச்சாரல்களிலும் பற்பல மண்டபங்கள், பெரியகோட்டை வாயில்கள், பாழடைந்த தேவாலயங்கள் காணப்படுவனவற்றிலிருந்து பண்டைக்காலத்தில் அவ்விடத்தில் ஓர் சீரும் சிறப்பும்வாய்ந்த நகரமொன்று இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

இந்த குருபீடத்தைக் கலியுகவாரம்பத்தில் **ஸ்ரீஜகத்குரு பண்டிதாராத்தியர் ஸ்ரீசைலக்ஷேத்திரத்தில்** தாபித்தனர். அந்த ஆசாரியசுவாமிகள் அவதரித்த மல்லிகார்ச்சுன மகாலிங்கத்தின் தேவாலயம் மிக நீண்டகாலமாக அவர்களுடைய ஸ்வாதீனத்திலேயே இருந்துவந்தது. எக்காரணத்தினாலோ இற்றைக்கு 50, 60 வருஷங்களுக்குமுன்னர் ஸ்மார்த்த மதத்தினராகிய புஷ்பகிரிமடத்தார்களுடைய ஆளுகையில் சேர்ந்திருக்கின்றது.

உலகமறிந்த சானந்தமகாரிஷி என்பவர் இந்த பீடத்தின் சீடராகின்றனர். இந்நிகழ்ச்சி வியாசமுனிவரெழுதிய காந்தபுராணத்தின் உட்பிரிவாகிய ஸ்ரீசைலகாண்டத்தில் நன்றாக விவரிக்கப்பெற்றுள்ளது. இந்த பீடத்தின் தாபகராகிய ஜகத்குரு பண்டிதாராத்திய சிவாசாரிய சுவாமிகள் பிரம சூத்திரங்களின்மேல் பாஷியத்தை எழுதியுள்ளார்களென்பது பசவபண்டிதராத்தியரால் எழுதப்பெற்ற உபநிஷத் பாஷியத்தில் எழுதியிருப்பதிலிருந்து வெளியாகின்றது. அன்றியும் இந்த பீடத்தின் பரம்பரையவர்கள் மகாநாராயணோபநிஷத்து, ஆநந்தவல்லி, பிருகுவல்லி, புருஷசூக்தம் முதலியவைகட்கு உத்தமமான பாஷியங்களை எழுதியிருக்கின்றார்கள். இந்த கிரந்தங்கள்

இற்றைக்கு 60 வருடங்கட்குமுன்னர் தெலுங்கு எழுத்துக்களினல் சமஸ்கிருதமொழியில் சென்னையில் அச்சிடப்பெற்றுள்ளன. இந்த பீடத்தின் பழமைக்குக்காரணமாக ஸ்ரீசைலம், காவலி, சித்தாபுரம் முதலான இடங்களில் கல்வெட்டுச் சாசனங்கள் மிகுதியாகக் கிடைத் திருக்கின்றன.

—(o)—

ஸ்ரீ 118 ஜகத்குரு நாகலுட பிக்ஷாவிருத்தி சிவாசாரிய மகாசுவாமிகள் ஸ்ரீசைல சமஸ்தானம்.

மகாசுவாமிகளுடைய வயது சுமார் அறுபது. இவர்கள் மகா தபசிகள். அநாதிகாலமாக ஸ்ரீசைல மல்லிகார்ச்சுனலிங்கதேவாலயம் இந்த பீடத்தின் ஆதீனத்திலிருந்தது. இப்பொழுது அது சிலகார ணத்தால் சுமார் 50, 60 வருடங்களாக ஸ்மார்த்த மதத்தினராகிய புஷ்பகிரி மடத்தாருடைய ஆளுகையில் சேர்ந்துவிட்டது. இப்பொ ழுது அதன் சம்மந்தமான விசாரணை கர்நூல் கோர்டின்கண் நடந்து கொண்டிருக்கின்றது. மகாசுவாமிகள் இப்பொழுது குந்தக்கல் என்ற இடத்தில் தங்கிவருகின்றார்கள்.

சிவப்பிரகாச சுவாமிகளும் அவர் நூல்களும்.

திரு. பண்டிதர், அ. கந்தசாமி பிள்ளையவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம்.

புலவர் பெருமான் சிவப்பிரகாச சுவாமிகள், நந் தமிழ்த் தாயின் அருந்தவப்புதல்வரும், செந்தமிழ்க்கடல் கடக்கத் திகைப் போர்க்கோர் கலங்கரை விளக்கமும், உத்தமக் கவிகட்கோர் கட்டளை யுமாய் விளங்குபவர். தாம் வாழ்ந்துவந்த ஊரோடு சேர்த்துத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என வழங்கப்பெறுபவர்.

இவர் கவிகளெல்லாம் புதுக் கற்பனைவாய்ந்தவைகளாய்ச் சொந்த அறிவின் திறத்தையும் (Originality) ஒன்றன் ஏற்றத் தாழ்வுகளை நோக்கிச் சீர்தூக்கும் ஆராய்ச்சித் திறத்தையும் (Criticism) தரத்தக்கவை. இவர் வீரசைவ சமயப் பெரியார்களுள் தலைசிறந்தவராக விளங்கினும் பொதுவாகத் தமிழருக்கும் சைவருக்கும் உற்ற அருந்துணைவராகவேயிருந்தார். அதனால், வடவேங்கடந் தென்குமரி குணகுடகடலாகவுள்ள அகப்பாட்டெல்லையும், இதற்கப்பாற்பட்ட புறப்பாட்டெல்லையாய பிறதேயங்களும் ஆகிய தமிழ்வழங்கும் நிலமெல்லாம் உலாவரும் பெரும்புகழுடையவர். இவரேயன்றி யிவருடன் பிறந்தாரிருவரும் பெரும்புலவர்கள்; இவர் தந்தையாரும் புலவர்; இவர் மூதாதையாரும் புலவர் * எனவே வழிவழிவந்த புலவர் மரபு இவர்மரபென்பது பெறப்படுகின்றது. o

இவரது ஊர்:— பிறந்துவளர்ந்தது காஞ்சிமாநகரம்; இலக்கணம்பயின்றது திருநெல்வேலி; வாழ்ந்துவந்தது துறைமங்கலம்; ஞானசாரிபரையடைந்தது பொம்மபுரம்; இட்டலிங்க பரசிவத்திற் கலந்தருளியது நல்லாற்றூர். + இவரது வயது முப்பத்திரண்டு என்ப. காலம்:— இற்றைக்கு 380 ஆண்டுகட்குமுன் என்ப.° இவர் தந்தையார்:— குமாரசாமித்தேசிகர். உடன் பிறந்தார்:— வேலையசுவாமிகள், கருணைப்பிரகாசசுவாமிகள், ஞானம்பிகை (பெண்)

* இவரது தாயாரும் தங்கையாரும் கல்வியில் வல்லார் என்பதும்உண்டு.

o "கயல்வாய்த்த கண்ணி யுலகீன்ற வல்லிபங் காவுனது
செயல்வாய்த்த அன்பர்க்கு மல்லாத வர்க்குஞ் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த எந்தைக்கி யான்வாய்த் ததுமிங் கென்றனக்கு
வயல்வாய்த் ததுமனை வாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே" என்பது இவர் தந்தையார் பாடல்.

+ இங்கு இவரது சமாதியிருக்கின்றதெனவும், கல்வியவாவுடையோர் அதனைச் சிலபகல்வலம்வந்து நல்லறிவுபடைக்கின்றன ரெனவும் கேள்வி.

° இடம்வாய்த்தவழி மற்றொருமுறை இதை ஆராய்வாம்.

என்பவர்கள். மைத்துனர் :— சாந்தலிங்கசுவாமிகள் (ஞானம்பிகையின் கணவர்) ×

இவர் பாடிய நூல்கள் 35 என்ப.

மாலை 7:—

1. சோணசைல மாலை. 2. நால்வர் நான்மணிமாலை. 3. இஷ்டலிங்கவபிடேகமாலை. 4 பிட்சாடன நவமணிமாலை. 5. நிரஞ்சனமாலை. 6 கைத்தலமாலை. 7. சதமணிமாலை.

அந்தாதி 2:—

1. திருச்செந்தில் நிரோட்டகயமகவந்தாதி. 2. பழமலையந்தாதி.

கலம்பகம் 2:—

1. வெங்கைக்கலம்பகம். 2. சிவஞானபாலையசுவாமிகள்கலம்பகம்.

உலா 1:—

திருவெங்கையுலா.

கோவை 1:—

திருவெங்கைக் கோவை.

பிள்ளைத்தமிழ் 1:—

1. சிவஞானபாலையசுவாமிகள் பிள்ளைத்தமிழ்.

புராணம் 3:—

1. திருக்கூவப்புராணம். 2. பிரபுலிங்கலீலை. 3. சீகாளத்திப்புராணம்.
(கண்ணப்பச் சருக்கம் ; நக்கீரச் சருக்கம்.)

தத்துவ நூல்கள் 3:—

1 சிவப்பிரகாசவிகாசம். 2 வேதாந்தசூடாமணி. 3 சித்தாந்தசிகாமணி.

தருக்க நூல் 1 :— தர்க்க பரிபாஷை.

நீதிநூல் 1 :— நன்னெறி.

பிறமதகண்டனம் 1 :— ஏசுமத நிராகரணம்.

× கோயமுத்தூருக்கடுத்த பேரூரில் இவர் சமாதியிருக்கின்றது. கொங்குவேளாண் குலத்தவரொருவர் சமீபகாலத்தில் இலிங்கதாரணஞ் செய்துகொண்டு இம்மடத்தின் அதிபரா யிருந்துவருகின்றனர். இலிங்கதாரணமில்லாதவரும் இவருடன் பூசைச்சாமிகளா யிருக்கின்றனர். வருடமொருமுறை மூன்றுநாள்மட்டும் சங்கமென்று கூட்டிச் செலவழிக்கும்செலவுக்கும் ஆரவாரத்திற்கும்குறைவில்லை. வேண்டிய நிலமும் பணமும் இருக்கின்றன.

மற்றையநூல்கள் 12.

1. சிவநாமமகிமை. 2. சிவதலவெண்பாமுறை. 3 (பழமலை) கோச்சகக் கலிப்பா. 4. வெங்கையலங்காரம். 5. சிவஞானபாலைய சுவாமிகள் நெஞ்சுவிடுதூது. 6. சிவஞானபாலையசுவாமிகள் தாலாட்டு. 7. ஷை திருப்பள்ளி எழுச்சி. 8. பெரியநாயகியம்மை விருத்தம். 9. ஷை கலித்துறை. 10. குறுங்கழிநெடில். 11. நெடுங்கழிநெடில். 12 இரத்தினச்சுருக்கம்.

இந்நூல்களையே வேறுவகையாகவும் பிரிக்கலாம்.

தலம்பற்றிப் பாடியவை.

1. திருக்கூவப்புராணம். 2. சீகாளத்திப்புராணம். 3 சோணசைல மாலை. 4. திருச்செந்தில் நிரோட்டகயமகவந்தாதி. 5 (முதுகுன்றம்) பிட்சாடன நவமணிமாலை. 6. பழமலையந்தாதி 7. பழமலைக் கோச்சகக்கலிப்பா. 8. பெரியநாயகியம்மை விருத்தம் 9. ஷை கலித்துறை. 10. (வெங்கனூர்) வெங்கைக்கோவை. 11. வெங்கைக்கலம்பகம். 12. வெங்கையுலா. 13. வெங்கையலங்காரம்.

* சிவஞானபாலையசுவாமியள் கருணைப்பெருக்கை வியந்துபாடியவை 5.

1. தாலாட்டு. 2. நெஞ்சுவிடுதூது. 3 திருப்பள்ளியெழுச்சி. 4. பிள்ளைத்தமிழ். 5. கலம்பகம்.

வீரசைவ சித்தாந்தத்தைப்பற்றியவை 6

1. பிரபுலிங்கலீலை. 2. இஷ்டலிங்க அபிஷேகமாலை 3. நெடுங்கழிநெடில். 4. குறுங்கழிநெடில். 5 நிரஞ்சனமாலை. 6. கைத்தலமாலை.

பொதுவாகச் சைவம்பற்றியவை.

1. நால்வர் நான்மணிமாலை. 2. சதமணிமாலை (?) 3. சிவநாம மகிமை. 4. சிவதலவெண்பாமுறை.

பிறநூல்கள் 4.

1. நன்னெறி. 2. வேசமதநிராகரணம். 3. தர்க்கபரிபாஷை. 4. இரத்தினச்சுருக்கம். தத்துவநூல்கள் 3; முற்கூறியவை.

---

* இவ்வைந்து நூல்களுள்ளும் வீரசைவ தத்துவமாகிய சடுத்தல இலக்கணம் முதலிய விளக்கப்பெற்றுள்ளன.

இவரது கவிகளைப்பற்றிய நல்லுரை:—

ஒருபுலவர் பாடும் பலநூல்களுள் ஒருநூலே மிகச்சிறந்து நிற்கும்; அந்நூலுள் ஒரு பகுதியே சிறக்கும்; அவ்வொரு பகுதியுள்ளும் ஒருபாடலே சிறக்கும்; இவர்நூல்களுள் ஒவ்வொருநூலும் அவற்றுள் ஒவ்வொரு பாடலும் மிகச்சிறந்துநிற்கும்.

மழவை மகாலிங்கையர்.

நான் ஒருதுரைக்குத் தமிழ்கற்பித்துவந்தபோது தமிழின் சுவையை அவர்க் குணர்த்தவேண்டி நன்னெறியில் ஒரு பாடலை மொழிபெயர்த்து ஆங்கிலத்திற் சொன்னவளவில் அவர் அதைப்பாராட்டினமைக்கு அளவேயில்லை.

ஒரு ஆங்கிலமறிந்த தமிழ்ப்புலவர்.

3 ஆங்கிலங்கற்கும் மாணவர் தொகுதிக்குத் தமிழ்ப்பாடங்கற்பிக்க நேர்ந்தபொழுது வகுப்பில் அமைதியையுண்டாக்கவேண்டினும், சுவையற்ற வெறும் இழவுகளாயுள்ள பாடல்களைக்கற்பிக்கும்போதும், இவர் பாடல்களில் ஒன்றைச்சொல்லி வகுப்பை வெகுதிறமையாய் நடத்திக்கொண்டுபோய்விடுவேன்.

ஓர் ஆங்கிலகலாசாலைத் தமிழ்ச் சொற்பொழிவாளர்.

4. வெளியூர்க்குச் சஞ்சாரம்போகும்போது என்னைப் பார்க்க வரும் சனங்களுக்கு நடுவிலிருந்து சிவப்பிரகாச சுவாமிகளின் பாடல்களிலிரண்டொன்றைக் கூறுவதனாலேயே கல்லாதவரும் என்னைவிட்டகலாதவாறு பிணித்துக்கொள்வேன்.

ஓர் தமிழ் வித்வான்:

இவர் தன்மையொன்றும் உணராது முருகதாசர் 0 என்பாரொருவர் தாம்பாடிய புலவர்புராணத்துள் இவரை (வயிணவத்தையிழித்துக் கூறியதால்) இளஞ்சைவர் என்றுளறிப்போயினர். அங்ஙனமாயின் திருவிளையாடற் புராணம்பாடிய பரஞ்சோதிமுனிவராதிப் பெரியாரனைவரும் இளஞ்சைவராவராதலின் "பேதையர் சொன்னவும் பன்னப் பெறுபவோ" எனத் தமிழுலகம் அக்கூற்றை யெள்ளி ஒதுக்கித்தள்ளும்.

---

0 தண்டபாணிசாமியென்றும் பெயர்.

இத்தகைய நுண்மாணுழை புலமுடைய இவர்தம் நூல்களுள் ஒவ்வொன்றாய் மேற்கொண்டு என்சிற்றறிவிற்கு எட்டியவாறு ஒரு சிற்றாராய்ச்சிக் கட்டுரை திங்கள்தோறும் இப்பத்திரிகையின்கண் எழுதிவரத் தொடங்கி முதற்கண் சோணசைலமாலையைப்பற்றி யெழுதலானேன். இதுவும் என்னிளமை நண்பரும், என்னுடன் கற்றாரும், என்னிலும் எனக்கினியாருமாகிய இவ்விதழாசிரியர் மிகுதிரு. குமாரவீரையரவர்கள் இட்ட கட்டளையே யாகும்.

சோணசைல மாலை.

சோணம் - செங்கிறம்; சைலம் - மலை; மாலை - மாலைபோற் றொடுக்கப்பட்டதொரு நூல். எனவே * அருணாசலத்தை (செம் மலை) ப்பாடிய நூல் என்பதாம். இந்நூலில் முதலிரண்டடிகள் பெரும்பாலும் தமது பல்வேறு குறைகளையும் கடவுள் திருமுன் விண்ணப்பித்துக்கொள்வதாகவும், பின்னிரண்டடிகள் அம்மலையை நூறு விதமாக வருணித்தும் பாடப்பெற்றிருக்கின்றன. முன்னிரண்டடிகளில் சைவசமயப் பரமாசாரிய மூர்த்திகளாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசக மூர்த்திகளையும், அவர்தம் அருளிச்செயல்களாகிய தேவார திருவாசகங்களையும் பாராட்டியவை :—

(1) "அண்ணன்மாபுகழ் மூவரும்புனை யரும்பாவன்றியென் கவியும் நின்றனக்காம்" (1)

"அருங்கவி வாதவூரனே முதலோர் அன்பிலே மென்றமை கருதி, யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா னியம்பலே மெய் யெனக்கருளாய்" (6) என்பவை.

(2) தேவார திருவாசகக் கருத்துக்களைக்காட்டுவனவற்றில்,—

"கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்து வெண்ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடும் நினையான் பூசனை புரியுமா றருளாய்" (85) என்பது,

---

* அயன் திருமால்கொண்ட செருக்கினை யொழித்தற்கு அவரிடைத் தோன்றிய சிவபெருமானது உருவமே அம்மலைவடிவமென்பது ஆன்றோர் வழக்கு.

" மருந்துவேண்டில் இவை ; மந்திரங்கள் இவை ;
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்க ளிவை ;
திருந்து தேவன்குடித் தேவர் தேவெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள் வேடங்களே "

என்னும் திருஞான சம்பந்த சுவாமிகளின் தேவாரக்கருத்தைக்காட்டுகின்றது.

" விரைவிடை யிவரும் நினைப்பிறவாமை வேண்டுகேன் வேண்டுக மதுரம் பெருகுறு தமிழ்ச்சொல் மலர்கினக் கணியும் பிறவியே வேண்டுவன் தமியேன் " (3) என்பது,

"குனித்தபுருவமும் கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்
[ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே "

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தை நினைப்பூட்டுகின்றது.

" குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை மதனவேளெனவும், புன்றொழின் மனிதர்ப் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும் புலமை தீர்த் தெனக்கருள் புரியாய் " (19) என்பது,

" தையலாருக்கோர் காமனேசால நலவழகுடை யையனே
கையுலாவிய வேலனேயென்று கழறினுங்கொடுப்பாரிலை
பொய்கை வாவியின் மேதிபாய்புக லூரைப்பாடுமின் புல
[விர்காள்
ஐயனுமம ருலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே "

என்னும் சுந்தரமூர்த்திகளின் தேவாரக் கருத்தைக் காட்டுகின்றது.

" புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால் புந்தியஞ் சினகரத் திருத்தி, நலம்புரி புனிதர் பேரவை தமியே னணுகுமா றருளுநாளுளதோ " (13) என்பது,

"உடையாளுன்றன்நடுவிருக்கும் உடையாள்நடுவுள்நீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரும் இருப்பதானா லடியே னுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்து முடியும்வண்ணம்முன்னின்றே"

என்னுந் திருவாசகக் கருத்தை யொக்கின்றது. பிறவுங்காண்க.

(தொடரும்)

‘வீ ர சை வ ம்.’

திருவாளர், S. ஏகாம்பர ஐயர் அவர்கள்,

தமிழ்ப்பண்டிதர், பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்.

வீரசைவம் என்னும் இப்பத்திரிகையின் மலர் 1, இதழ் 3-ல்
வீராகமம், வாதுளாகமம், ஸ்வாயம்புவாகமம், சுப்ரபோதாகமம் முத
லிய ஆகமங்களும், ரேணுகபாஷ்யம், சோமநாத பாஷ்யம், பண்டித
பாஷ்யம், ஸ்ரீகரபாஷ்யம் முதலிய பாஷ்யங்களும், வேதம், இதிகாசம்,
புராணம் முதலிய பல சாஸ்திரங்களும் **வீரசைவம்** உயர்வுடைத்தெ
னக் கூறுதலின் அதனையறிந்து கடைப்பிடித்தொழுகல் முற்கூறிய
அதனினும் சிறந்ததொன்றென்பதை ஒருவாறு தொகுத்து ஆகமங்
கள் இனையவெனவும், அவைகள் சிவபரம்பொருளின் பஞ்சமுகங்களி
னின்றும் உதித்தனவெனவும், ஆகமம் என்னும் அருமைச் சொற்கு
ஆன்றோர்கள் கூறும் பொருள்கள் இவையெனவும், வேதம், ஆகமம்
இரண்டும் ஒருபொருளையேகூறுகின்றனவெனவும், அவ்வாகமங்களும்
வேதங்களும் இவ்வீரசைவமே சிறப்புடைத்தெனக் கூறுநிற்கின்றன
வெனவும்கூறி ஆகமங்களுள் தலைசிறந்து முடிந்தபொருள்களை முடித்
துக்காட்டும் வாதுளாகமத்தில் வீரசைவ சித்தாந்தத்தை இறைவன்
உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய தத்துவங்கள் பலவற்றுள்ளும்
வேண்டிய சிலவற்றை அன்னத்தின் பக்குவமறிவான் ஓரன்னத்தின்
பக்குவங்கொண்டே சமைத்த அன்னங்களை அறிதல் என்னும் (ஸ்தா
லீபுலாக) ஞாயம்பற்றி வேண்டிய பிரமாணங்களை வேண்டியவாறு
கூறும் கருத்துடைமையால் விரிவஞ்சிச் சுருக்கிக் கூறினோம்.

இனி வீசசைவமென்னும் சப்தத்துவயத்தின் சம்யோகத்தால்
அதன் உண்மைத் தத்துவ முணர்தல் அதனினும் சிறந்த வேறொன்
றென்பதை உணர்வோமாக.

வீரம் + சைவம், வீரசைவம் எனவும், வீ + ர + சைவம்,
வீரசைவம் எனவும் கூறுதற்குரிய பலவகைப் பொருள்களையும் தம்
முள் அடக்கி மிளிர்கின்ற வீரசைவ மென்னும் பதத்தின் தத்துவத்
தை நிச்சயித்தறிதற்கு முதற்கண் சைவம் என்பது அறியத்தக்கதே
யாதலின் அதன் இயல்பைச் சிறிது உணர்வோமாக.

விஷ்ணுசம்பந்தம் வைஷ்ணவம், புத்தசம்பந்தம் பௌத்தம் என்பனபோல சிவசம்பந்தம் சைவம் எனவந்த (தத்திதாந்த) மொழியேயாகும். இதனல் (சிவஸ்ய இதம் சைவம்) என்பர் வடநூலார். " விசிஷ்டம் வீயதேயஸ்மாது வீரயிதி அபிதீயதே, சிவேநச ஹசம்பந்தம் சைவமாதிருத்ய தம்புதை:" என்னும் வாதுளாகம வாக்கியம் (சிவேநசஹ சம்பந்தம் சைவமாதிருத்திப தம்புதை :) என்பதனுலும் சிவசம்பந்தம் சைவம் என்று ஏற்படுகின்றது. சிவத்தினது சம்பந்தம் சைவம் என்றதனல் சிவத்தியல்பு யாது, சம்பந்தம் யாது என்பது விசாரிக்கத்தக்கதே.

சிவம்.

சிவ என்பது, சேரதே அஸ்மிந் பூதாநி இதி சிவ: என்றவ்யுத்பத்திப்படி எல்லாப் பூதங்களும் இவருள் அடங்கி நிற்றலான் சிவன் எனவும், சிவசப்தத்திற்கு மேற்காட்டிய தாதுப்பொருட்படி ஏற்படும் யௌகிகார்த்தத் (யோகமென்னும் சப்த விருத்தியால் சித்தித்த அர்த்தத்) தை விசாரிக்குமிடத்து, சராசரங்களாக விரிந்த அகிலப்பிரபஞ்சங்களனைத்தையும் தன்வயினடக்கியும், தனது சொரூபசத்தியால் அவற்றைரக்ஷித்தும், தானெவற்றினும் சம்பந்தப்படாமல் அவைகட்கு வேருயுள்ளதென்றும் ஏற்படும் விசேஷத்தால், அச்சப்தவாச்சியனை சிவன் சத்ரூபனென்பது செவ்விதின் அமைந்துநின்றது.

அன்றியும் அச்சிவசப்தம் (ஸோஸ்வஸிரேயஸம் சிவம் பத்ரம் கல்யாணம் மங்களம் சுபம்) என்னும் அமரகோசவசனப்படி மங்களவாசகமாயு மிருத்தலின், அதற்கு அனந்த மங்களசொரூபமானதென்பதும் பொருளாம். அம்மங்களம் சகல ஆன்மாக்களாலும் விரும்பப்படுவதாய் இருத்தலின் அது சுகசொரூபமேயாம். இங்ஙனம் அந்த மங்களார்த்தத்தில் ரூடமாக அமைந்துநின்ற அச்சிவ சப்தத்தினல் அவரே பரமானந்த சொரூபருமாவரென்பது மேதாவிகள் பலரும் அறிந்ததேயாகும்.

அன்றியும், மாண்டூக்யோபநிஷத், இரண்டாவது கண்டம், ஐந்தாவதநுவாகம்,

" அதிருஷ்ட மவ்யவஹார்ய மக்ராஹ்ய மலக்ஷணம்
மசிந்திய மவ்யபதேஸ்ய மைகாத்மய ப்ரத்யய சாரம்
ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவ மத்வைதம்
சதுர்த்தம் மந்யந்தேஸஆத்மாஸ விஜ்ஞேய :" என்றதால்,

கண்முதலிய இந்திரிய ஞானத்திற்குக் கோசரமாகாததும், வாக் இந்திரியத்தின் வியாபாரத்திற்கு எட்டாததும், பாணீ இந்திரியத்திற்குப் பிடிபடாததும், அனுமானப் பிரமாணத்தாலும் அறியப்படாததும், இன்னதன்மையதென்று நிச்சயிக்கவொண்ணாததும், இவ்வகையினதென்று சொல்ல முடியாததும், விஷய விஷயிகளென்னும் பேதமற்ற ஞானமயமானதும், அவித்யாதிக் கிருதவிசேஷ பரகிதமானதும், ஞாதுர் ஞான ஞேயாதி சமஸ்த பேத ரகிதமானதுமா யிருக்கிற யாதொரு சிவமுண்டோ அந்தப்பரமசிவனைத் துரீய வஸ்துவாக ஆத்ம ஞானிகள் நினைக்கிறார்கள். அவரே ப்ரம்ஹம் ஆத்மா முதலிய சப்தங்களால் வேதாதிகளில் பிரதிபாதிக்கப்படுவர். அவரே முமுக்ஷுக்களாலும், குருபதேசத்தாலும், சாஸ்திர ஆராய்ச்சியினாலும் நன்கு விசாரித்து அறியத்தக்கவர் என்னும் பிரமாணத்தில் (ஐகாத்மயப்ரத்யயசாரம் என்னும் விசேஷணத்தால்) அச்சிவன் சித்ரூபனுமாவன் என்பதும் பெறப்பட்டது.

இங்ஙனம் சிவசப்தமானது, யோகம், ரூடி என்ற பதவிருத்திகளினாலே சதாநந்த ரூபத்தையும், மற்றும் அதுவே லக்ஷணவாக்யகடகமாய்நின்று, சித்ரூபத்தையும் விளக்கிக்கொண்டு, சச்சிதாநந்த சொரூபமான பரசிவ வஸ்துவை பிரதிபாதிக்கின்றது.

இதனால் நாம் அறியக்கிடந்தன:— சிவ என்பதற்கு இம் சிப்பதுஎன்னும் தாதுவிலிருந்து சிம்மம்என வந்ததுபோல வசிஎன்ற தாதுவிலிருந்து சிவவெனமாறிற்றென்பது "ஸேரதே அஸ்மிந் பூதாநி இதிஸ்சிவ:" என்றதால் எல்லாப்பூதங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு (வசித்து) தான்அப்பாற்பட்டு நிற்கின்றதென்பது 'யோகம்' என்பதால் ஏற்படுகின்றபடியால் சத்தாக நின்றதென்பதூஉம், அமரகோசம் சிவசப்தத்திற்கு மங்களம் சுபம் முதலாகக்கூறுதலாலும் அம் மங்களமே யாவராலும்விரும்பப்படுதலாலும் அது சுகசொரூபமென்று ஏற்படுகின்றபடியாலும் 'ரூடி' என்பதால் ஆநந்தமாக நிற்கின்றதென்பதூஉம், மாண்டூக்ய உபநிஷத்து "ஐகாத்மய ப்ரத்யயசாரம்" என்று கூறிய விசேஷணத்தால் அச்சிவ சப்தம் சித்ரூபமாக விளங்குதலின் சித்தாக நின்றதென்பதூஉம் ஆகிய இவைகளேயாம்.

ஆகையால் சிவம்என்னும் சப்தம் வாசகவாச்சியப்பொருளாய் நின்று சச்சிதானந்தமாக விளங்குகின்றதென்பது தேற்றமாகின்றது.

சுபம்.

அட்டாபரணம்.

திரு. கந்தசாமி ஐயர் அவர்கள், கணக்காயனர், தேத்தாக்குடி.

௩. பஞ்சாக்கரம்.

" அக்க மாமணி நீறணி யிலிங்க தாரணன்றான்
மிக்க தாஞ்சிவ தத்துவம் விளங்குற விளக்கும்
நக்க னுமமா மைந்தெழுத் தாகவே நவிலும்
தக்க வித்தையை முறையினிற் சபித்திடத் தகுமால் "
(என்பது சித்தாந்த சிகாமணி)

வேதாகம வுணர்ச்சியின் வேட்கைமிக்க பெரியோர்களே!

சிவபெருமானே முழுமுதற்கடவுளெனவும், பஞ்சாக்கரமே அப்பெருமானது நாமங்களுள் சிறந்ததெனவும், அதுவே மந்திரங்களெல்லாவற்றிற்குந் தலைமைவாய்ந்ததெனவும், அம்மந்திரமே எவ்வகைப் பயனையுந் தந்து முத்தியையும் தரத்தக்கதெனவும், விரித்துரைக்குமுன்னர், மந்திரம் என்பதும் எழுத்தாலாகிய ஓர்வகை மொழி தானே, மந்திரம் எனப்படும் குறிப்பிட்ட சில மொழிகட்குமாத்திரம் மற்றைய மொழிகட்கில்லாத ஆற்றல் உண்டென்பது பொருத்தமாகுமா? அக்கூற்றை ஆராய்ச்சியுடையார் ஏற்றுக்கொள்வாரா? என்னும் இளஞரது வினக்களுக்குத்தக்கவாறு விடைகூறிப் பின்னர் மேற்கொண்ட கட்டுரைப் பொருளை ஆராயத் தொடங்குவேன். இலக்கணவரம்பில்லாத மொழிகள் ஒழிய அவ்வரம்பிற்குட்பட்ட மொழிகளுள் எல்லா மொழிகளும் எழுத்துக்களாலானவையே யெனினும் ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு தனித்த பொருளை விளக்குவதெனவும், அவற்றுள் ஓர் மொழி இன்பத்தையும், ஓர்சொல் துன்பத்தையும், ஒருரை கோபத்தையும், ஓர் சொல் அமைதியையும், மற்றோர் சொல்பகைமையையும், வேறொருசொல் நட்பையும் உண்டாக்குகின்றனவென்பதையும், பறவை விலங்கு மக்களைக்குறிக்க வெவ்வேறு சொற்கள் இருக்கின்றன வென்பதையும், இன்னும் விளங்கக்கூறின் எதிர்ப்பட்டாருடன் நாம்பேசுங்கால் நமதுமொழிகளுள் ஒன்று இன்பத்தையும் அக்கணத்திலேயே மற்றொன்று கடுங்கோபத்தையும் உண்டாக்குகின்றன என்பதையும் மக்களென எண்ணப்படுவோருள் யார்

தாம் ஒப்புக்கொள்ளாதார்? இதனை யொப்புக்கொள்ளவே கடவுளது குணங்களையோ, அவரது செயலையோ, அவரது கருணைத்திறத்தையோ, அவரிடம் வேண்டிக்கொள்ளும் முறைப்பாட்டையோ, எல்லாவற்றையும் அவர்க்குரியனவாக்கும் நிவேதனத்தையோ குறிக்குஞ் சொற்கள் அவ்வப்பயனைத்தரும் என்பதில் மொழித்திறத்தையாராயும் உணர்ச்சியுடையார் யாருந்துணிவுகொள்வரேயன்றிமறுப்பவர் இலரே. இதனால் கடவுளைத் துதிக்கும்பொருளமைந்த மொழிகள் அக்கடவுட்கின்பந்தருமென்பதையும், அக்கடவுளைவேண்டிக்கொண்ட பொருளைத்தருமென்பதையும் யாரும் ஒப்புக்கொள்ளவேண்டியதாகின்றது. இத்துணைச் சமாதானங்களைமட்டிலுஞ் சுருக்கமாகக் கூறிக்கொண்டு இனி எடுத்துக்கொண்ட பொருளாராய்ச்சியில் புகுவோமாக.

பஞ்சாக்ஷரம் என்பது பஞ்ச + அக்ஷரம் எனப்பிரிக்கப்படும். இவை வடமொழியாதலின் பஞ்சாக்ஷரமெனத் தீர்க்கசந்திபெற்றன. இதுதமிழில் பஞ்சாக்கரமெனவழங்கப்படுமாயினும் ஐந்தெழுத்தென்பது உண்மைத் தனித்தமிழ்மொழியாம். இவ்விருமொழிகளும் இம்மந்திரப்பொருளில் ஒத்த கருத்துடையனவே.

பஞ்சாக்கரமாகிய மகாமந்திரத்தை மங்களகரமாகிய விபூதி உருத்திராக்கங்களைத் தரித்த சிவசம்பந்தமுடைய சைவரும் வீரசைவருமாகிய யாவரும் சற்குரு உபதேசத்தால் முறைப்படி அறிந்து எக்காலத்தும் நாத்தழும்புறப் புறத்தும் உணர்ச்சியுறப் பேரன்புடன் அகத்தும் துதித்தல்வேண்டும் என்பது ஆகமத்துணிபு.

உண்மையாகிய சிவதத்துவங்களினும் மேன்மைவாய்ந்த தத்துவங்கள் வேறொன்றில்லை; அதுபோல வேதங்களின் சிரப்பொருளாக வைத்தெண்ணப்படும் ஐந்தெழுத்தாகிய மந்திரங்களினும் மேலாக எண்ணப்படும் வேறுமந்திரங்கள் இல்லையெனவுணர்தல்வேண்டும். இவ்வுலகத்தைத் தோற்றுவித்த மூலகாரணமாகிய சிவத்தை யுணர்ந்திடில் மற்றைய தேவர்களால் அடையும் பலன் வேறொன்றில்லையே? அதுபோல ஐந்தெழுத்தாகிய மந்திரத்தை யுணர்ந்திடில் மற்றைத் மந்திரங்களால் அடையும்பலன் யாதொன்றுமில்லை.

பிரமன் முதலாகிய தேவர்களுள் மகாதேவனெனப்பெறும் சிவபெருமான் தலைமைபெற்று விளங்குதல்போல எழுகோடி மந்திரங்களுள் பஞ்சாக்கரமாகிய புனிதமந்திரமே தலைமைபெற்றுவிளங்குவது.

இதனை "மாமறை நூல் ஏற்றிக்கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்" எனப் பட்டினத்தடிகளும், "பேதமாம் எழுகோடி மந்திரங்களிற் பெரிதாம் போத வைந்தெழுத்தாகிய புனித மந்திரமே" எனச் சிவப்பிரகாசமுனிவரும் கூறுவர். வடநூலார் சப்தகோடி மகா மந்திரம் என்பர். *

சிவபெருமான் உலகத்தின் தோற்றவொடுக்கங்கட்குக் காரணமாயிருத்தல்போலப் பல்வகைப்பட்ட மந்திரங்கட்கும் பிறப்பிடமாயுள்ளது பஞ்சாக்கரமே எனப் பெரியோர்கூறுவர். அஞ்செழுத்தாகிய மந்திரம் பரம்பொருளாகிய சிவபெருமானுக்குரிய நாமமாகும்; அச் சிவபெருமானே நாமியாவன்; ஐந்தெழுத்தே நாமமாகவும், சிவபெருமானே நாமியாகவும் கூறப்படுதலால், அவ்வைந்தெழுத்தாகிய ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உள்ளத்தின்கண் பதித்துவைத்தலால் அதினின்றும் சிவபெருமானாகிய இறைவன் தோன்றி விளங்குவன் எனத்துணிதற்கிடமாகின்றது.

மந்திரம் என்பதற்கு 'நினைப்பவரைக் காப்பாற்றுவது' என்பது பொருளாதலின் இவ்வைந்தெழுத்தே நம்மைத் தீயவழியினின்று நீக்கி நன்னெறியிலுய்த்துக் காப்பது எனத்துணிதல்வேண்டும்.

சச்சிதானந்தமாக விளங்கும் சங்கரன் முத்தனுயும், அநாதியாகவே மும்மலங்களினின்றும நீங்கிய சுத்தனுயும், மங்கலம் முழுவதுந் தோற்றுதற்கிடமாயும் இருத்தலின் அச் சங்கரனைச் சிவம் என்றுரைப்பர். சிவம் என்னும் ஈரெழுத்தொருமொழி சிறப்பாகப் பரப்பிரமத்தையுணர்த்தும்; ஆகலால் சிவமல்லாத மற்றைய நாமங்கள் அனைத்தும் கௌணமாக (பொதுவாக) விரியும்; ஆகலின் சிவமென்னும் மொழியே சச்சிதானந்த பரசிவத்தைக் குறிப்பிடும் முக்கிய நாமமென வேதமுதலிய கலைகளனைத்துங் கூறுகின்றன. வேதங்கள்

---

* சப்தகோடி மகாமந்திரங்கள் :— நம:, ஸ்வாஹா:, வஷட், ஹும்பட் வவுஷட், பட், ஸ்வதா என்பன. வர்க்கமொன்றிற்குக் கோடியாக எழுவர்க்கத்திற்கும் எழுகோடி மந்திரங்களென்பர். கோடி என்பது முடிவு; மந்திரங்களின் முடிவில் உச்சரிக்கப்படும் காரணத்தால் எழுகோடி மகாமந்திரமெனப்படும் எனவும், இவ்வெழுவகை மந்திரங்களுக்கும் முடிவாயிருப்பது பஞ்சாக்கரமந்திரம் எனவும் கூறுவர். உண்மையை ஆகமங்களில் ஆராய்ந்துணர்க.

ருக், யஜுர், சாமம் என மூன்றுவகைப்படும்; அவற்றுள் நடுநிலைமையாக விளங்குவது யஜுர்வேதம்; அதன் ஏழுகாண்டங்களுள் நடுவினுள்ளது நான்காவது காண்டம்; அக்காண்டத்தின் ஏழு சம்ஹிதையுள் நடுவிலுள்ளது நான்காவது சம்ஹிதை; அச் சம்ஹிதையின் நடுவிலுள்ள ஐந்தாவது சம்ஹிதையே ஸ்ரீருத்ரம் எனப்படும்; அந்த ருத்ரத்தினடுவிலுள்ளது "நம: சோமாயச" என்னும் அநுவாகம்; அந்த அநுவாகத்தின் நடுவிலுள்ளது "நம: சிவாயச" என்னும் வாக்கியம், அவ்வாக்கியத்தின் நடுவிலுள்ளது 'சிவ' என்னும் இரண்டெழுத்து; இவ்விரண்டெழுத்தே வேத இதயம் என்னும் ஆதிநாயகற்கு முக்கியப்பெயராம். இத்தகைய பெருமைவாய்ந்த மந்திரமாகிய ஐந்தெழுத்தை முத்தியின்பத்தின்கண் விருப்புள்ளவர் யாரும் தினமும் அன்புபெருக உச்சரித்திடல்வேண்டும். சிவபெருமான் பாசத்தைவிடுவிப்பவனாதலின் அவனது நாமமாகிய அஞ்செழுத்தும் பாசத்தினின்றும் விடுவிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்த ஐந்தக்கரங்களினாலேயே பூதம் ஐந்து, பொறியைந்து, புலனைந்து, கருமேந்திரியமைந்து, படைத்தல் முதலிய தொழிலைந்து, இவற்றிற்குக்காரணராகிய மூர்த்திகளைவர், என பஞ்சபிரம்ம மந்திரங்கள் ஆகியவற்றை விரித்துரைப்பர் அறிவுடையோர். இந்த பஞ்சாக்கரத்துடன் முதலில் பிரணவத்தைச் சேர்த்துரைக்கும்போது அது சடாக்ஷரம் எனப்படும்.

'ஓம்' என்னும் பிரணவம் நிட்களசிவத்தைக்காட்டும். 'நமசிவாய' என்னும் ஐந்தக்கரம் பஞ்சப்பிரம மந்திரத்தைத் தனுவாகவுடைய சகளமாகிய சதாசிவத்தைக்காட்டும்: பிரணவத்துடன்கூடிய ஷடாக்ஷரம் சகள நிட்களமாகிய சிவத்தைக்காட்டும்; ஆதலின் சிவலிங்கப்பெருமானை அர்ச்சிப்போர் சடாக்ஷரமந்திரத்தால் அர்ச்சிப்பர்.

பஞ்சாக்கரஞ் சேபிக்குமுறை.

வடக்கு அல்லது கிழக்குநோக்கியிருந்து நாள்தோறும் மூன்றுமுறை பிராணாயாமம் செய்துகொண்டு அம்பிகைபாகராகிய சிவபெருமானை அழகுபெறத்தம்முள்ளத்தில்தியானித்துக்கொண்டு புலன்களிற் செல்லாது ஒருமைப்பட்ட மனத்துடன் மந்திரத்தைச் செபிக்கக்கடவது. அங்ஙனம் செபிக்குங்கால் அதன்விதி வாசிகம், உபாஞ்சு,

மாநதம் என மூவகைப்படும். அவற்றுள் வாசிகமானது அருகிருப்போர் கேட்கும்படி முறைதவறாது உச்சரித்தலாம். உபாஞ்சென்பது பக்கத்திலுள்ளோர் கேட்காதபடி உதடுடன் உதடுபொருந்த மெதுவாக வுச்சரிப்பது. மானதமாவது உதடுடன் உதடு பொருந்தாது உள்ளத்தின்கண் மௌனமாகத் தியானித்தலாம். கர்மயாகம், விரதம், தானம், கடுந்தவம், என்பனயாவும் மகாமந்திர வேள்வியாகிய வாசிக செபத்தினைச்செய்வதால் அடையும் பயனில் பதினறில் ஒரு பங்கையேனும் தாராவாம். வாசிகம் என்னும் செபத்தினும் நூறு மடங்கு பலனைத்தருவது உபாஞ்சு என்னும் செபம். உபாஞ்சினும் ஆயிரமடங்கு பலனைத்தருவது மானதம்; ஆதலால் இருவகைச்செபத்தினும் மானதமே பெரும்பவங்களையெல்லாம் ஒழித்து ஞானமயமாக விளங்கச்செய்யும் பெருமைவாய்ந்தது. வாசிக முதலிய மூவகை நெறியால் உள்ளத்தின்கண் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு ஒவ்வொருவரும் தமது பாசங்கள் ஒழியும்படி செபித்தல்வேண்டும். லிங்காங்கசம்பந்தியாக விளங்கும் வீரசைவர் இம்மந்திரங்களாலேயே சிவபூசையைச் செய்தல்வேண்டும். பஞ்சாக்கர மந்திரத்தால் வில்வ முதலிய உத்தம பத்திரங்களைக்கொண்டு செய்யும் சிவார்ச்சனையால் அடையாத பலன்கள் ஒன்றேனுமில்லையே! இதன் பெருமைக்குப் பலவுதாரணங்கள் வேண்டுவதில்லையே! மகாஞானியாகிய சாநந்த முனிவரென்பார் இவ்வைந்தெழுத்தாகியபரமமந்திரத்தை யுச்சரித்தே கொடிய நரகத்திலிருந்தோரையெல்லாம் எடுத்துச் சுவர்க்கத்தி லின்புற்று வாழும்படி வைத்தருளினர். வசிட்டாதி முனிவர்கள் உயர்ந்த நிலையை யடைந்ததும் இம் மந்திரத்தாலேயே. செபிக்குங்கால் தக்கதோரிடத்தில் தக்கதோர் ஆசனத்திலமர்ந்து பத்மாசனமாக நேராக நிமிர்ந்திருந்து அசைவற்றுப் புலன்களிற் செலவிடாது சிவபெருமானையே தியானித்துக்கொண்டு அல்லது இஷ்டலிங்கப் பெருமானிடத்திலேயே நோக்கம்வைத்துச் செபித்தல்வேண்டும். இங்ஙனம் சிறிது நேரம் செபித்தாலும் போதுமானதே. வாசர்களே! இதனைப்படிப்பதாலாயபயன் இம்முறையிலிருந்து 10 நிமிடமாயினும் செபித்துப் பயன்பெற முயல்தலாம்.

(தொடரும்)

உண்மையுணர்வு.

திருமிகு, லா. சா. வைத்திலிங்கய்யர் அவர்கள், உள்நாட்டு மருத்துவர்,
(பெருவளநல்லூர்)

“ எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும். ”

உண்மையை யாராயும் உத்தமர்களே!

நமது பரதநாட்டின்கண் பேதமை தலைப்படுங்கால் உண்மைப் பெரியார் பலர்தோன்றி மக்களுக்குள்ள மிருகத்தன்மையைப் போக்கியும், சிவகாருணியத்தைப் போதித்தும், தமக்குள் பேதமின்றி மாசற்ற அன்பின்வடிவினராக நட்புரிமையிற்பழகச்செய்தும் பண்படுத்தியதேயன்றி சச்சிதானந்த பரசிவப் பொருளாகிய கடவுள் நிலையையும், தமது அனுபவ வுண்மையையும் யாவரும் அறிந்துய்யவேண்டி உண்மை நூல்களின் வழியாக வெளியிட்டுள்ளார்கள். இவ்வுண்மை நூலாகிய சாஸ்திரங்களைப்பயில்வதால் நல்லொழுக்கமாகிய படித்திரங்களும், சீர்திருத்தங்களும், பரஸ்பர வன்பும் வெளிப்படவில்லையா? இவ்வுண்மை நூலுணர்ச்சியெல்லாம் முறையாற்கற்ற இலக்கணநூற் பயிற்சியுடையார்க்கேயன்றி ஏனையகற்றுச்சொல்லியாகிய இளைஞர்கட்குப் புலப்படுதல் கூடுமா? இங்ஙனம் ஓர் துறையில் முறையாகக் கல்லாதார் கொள்ளும் கொள்கை ஒருநிலைப்படாது மாறிமாறித் தலை தடுமாற்றமடையுமல்லவா? இவரது கொள்கையை மேற்கொள்ளும் உலகமும் தலைதடுமாற்றமடையுமல்லவா?

இம்முறையை யாவரும் அடைய விரும்பின் விளக்கமான அறிவுடன் சாவதானமாக இருந்து சுருதி யுக்தி அனுபவ வாயிலாக அடையவேண்டியதேயன்றி நுனிப்புல் மேய்ந்து வாய்க்கு வந்தவாறெல்லாம் அசைபோடுவதால் உண்மை காணுதல் முடியாதன்றே! நமது பெரியார்கள் மக்களது அறிவிற்குத் தக்கவாறு படிக்கிரமமாக எதனையும் எழுதியுள்ளார்கள். ஓர் ஆசிரியர் மாணவனுக்கு அவன் பயிலுந்திறமைக்குத் தக்கவாறு உதாரணங்களுடன் போதிப்பதைக் கண்டதில்லையா? இதுபோல் நமது சாஸ்திரங்களுள்ளும் பக்குவம்

நோக்கியே சத்தும அசத்தும் கலந்தே போதிக்கப்படுகின்றன. சத்தைக்கொள்வகையாற் கொண்டும், அசத்தை விடுக்கும் வகையால் விடுத்தும் உண்மையுணர்தலேயன்றி அசத்தைப் பொருளெனக்கொள்வோமாயின் சந்தேகவாதிகளாகத் தோன்றுவமேயன்றித் தெளிவுடையராதல் எப்பொழுதும் இல்லையன்றோ!

எப்பொருளினும் இது கொள்ளத்தக்கது இது விலக்கத்தக்கதென நாம் தெளிந்துணரவில்லையா? உதாரணமாக நெல்லின்கண் உமியும் அரிசியும், பழத்தின்கண் தோலும் சத்தும், சொல்லின்கண் தீச்சொல்லும் நற்சொல்லும், மனிதனில் உடலும் உயிரும்போல் எப்பொருள்களினும் அசத்தும் சத்தும் கலந்து நிற்கவில்லையா? இக்கருத்துபற்றியே,

"நெல்லிற் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு" என்றார் ஓர் பெரியாரும்;

அன்றியும், இக்கருத்தைப் புலப்படுத்துங் கருத்தானன்றோ,

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்றார் நமது பொய்யாமொழியாரும்.

இக்கருத்தை யுட்கொண்டாரர்யாத ஐயமேற்கொண்டறிவு மயங்கிய நம்மவருட் சிலர் கடவுள் என்பவர் உலகத்திற்கு அவசியந்தானா? கடவுளுண்மைக்குத் திருட்டாந்தங் காட்டினாலன்றி நம்பமாட்டோமென்றும், கடவுள் கண்ணிற்குப் புலனாகமாட்டாத கள்வராவென்றும், அவ்வாறு புலனாகாக் கரவுடையாரொருவரை நம்புவதால் ஆயபயன்யாது என்றும், கடவுளில்லையென்றால் உலகம் பெருக்கமடையாதோவென்றும், கடவுளை நம்புவதால் யாது நன்மையையடைந்தோம் அல்லது அடைந்தீர் என்றும், கடவுளையறியாத சில வஞ்சகர் அறிந்தார்போன்று ஒன்றுமறியாத ஏழைமக்களைவஞ்சித்துப்பொருள் பறிக்கக்கருதிப் பசு புலித்தோல் போர்த்துக்கொண்டு புல்மேய்ந்தாற்போல் குருமாரெனத் தம்மைக்காட்டி எழுதிவைத்த கட்டுக்கதையென்றும், யாவும் இயற்கையேயன்றி ஒருவரால் உண்டாக்கப்படவில்லையென்றும், உங்கள் கடவுள் எக்காலத்தில் எங்கிருந்து இவ்வுலகத்தைப் படைத்தாரென்றும் இவைபோன்ற பலவினாக்களை வினவி அமைதியின்றி வாதுக்கழைக்கின்றனரேயன்றி உண்மைநூலை உணர்

ச்சிகொண்டு ஆராய்கின்றாரில்லை. இக்கேள்விகட்கெல்லாம் உண்மை நூல் ஆராய்ச்சிகொண்டு தக்கவிடைகூறத் தலைப்படுதல்வேண்டும். உண்மையுணரும் விருப்பமுடையார் அமைதியுடன் ஆராய்ச்சி முறையினின்றும் சாவதானமாகக் கேட்டுணர்தற்குரியாராகுக!

(தொடரும்)

தருக்கநூலும் உண்மையுணர்தற்குக் கருவியாதலின், வாதம் ஏற்படுங்கால் உண்மைக்குப் பெருமையேற்படுங்காலம் என மகிழ்தல் வேண்டும். உலகத்தின்கண் வாளாவிருப்போரினும் வினவமுற்படுவோர் அறிவுடையோரே. வினவிற்கேற்ற விடைகூறி உண்மையைப் புலப்படுத்த முயல்தல்வேண்டும். விடைகூற முடியாதாயின் தமதாராய்ச்சியின்மையைப் பெரியார்மேற் சுமத்தலாகாது. கல்வியறிவுடையாரென முற்பட்டோர் உறுதியின்றித் தாங்கொண்ட ஒழுக்கமல்லா நெறியை பெரியார்வாக்கிற் புகுத்தத் துணிபவரா சமயவுண்மையை நிலைநாட்ட வல்லவராவர்? தோல்வியும் வெற்றியும் வாதிக்கே யன்றி வாதத்திற்கில்லையாதலின் தக்கவிடைகூறமாட்டாதபோது இருவேமும் அமைதியுடன் ஆராய்வோமெனச் சமாதானங்கூறுதல்வேண்டும். திருவருளை முன்னிட்டுப் பன்முறை ஆராய்ந்துரைக்க முயல்தல்வேண்டும். ஆத்திரம் உண்மையை நிலைநாட்டாதென்யாரும் அமைதியுறல் வேண்டும்என வேண்டுவன், பத்திராசிரியர்.

தென்னாட்டு நிகழ்ச்சிகள்.

---

1. மயிலம் தேவஸ்தானம்.

இந்த தேவஸ்தானத்தின்கண் இதன் ஆதீனபரம்பரை தர்மகர்த்தத்துவம் ஸ்ரீமத் சிவஞானபாலையசுவாமிகள் பெரும்பொருட்செலவில் புதியதோர் இரதம் செய்துவருகின்றார்கள் என முன்னரே இவ்விதழைப் படித்தோர் அறிந்திருப்பார்கள். அந்தஇரதம் விடாமுயற்சியால் ஓராண்டிற்குள் முடிவுபெற்று பங்குனி உத்திரத் திருவிழாவில் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி வள்ளிதேவநாயகியாருடன் எழுந்தருளப்பெற்றுத் திருவுலா வந்தகாட்சி கண்படைத்த பயனையிற்றெனக் கண்டின்புற்றோர் கூறப் பெருமகிழ்வடைகின்றோம்.

2. சண்முககிரி மயில்வாகன மண்டபப்படி.

நடந்த பங்குனி உத்திரத்திருவிழா ஐந்தாம் திருநாளில் மேலே வட்டகைக் காரியதரிசி திருவாளர் S. முத்துசாமிஐயரவர்களால் செய்விக்கப்பெற்ற மயில்வாகனத்தின்கண் முருகப்பெருமான் எழுந்தருளி வர சில வீரசைவர்களின் பொருளுதவியால் ஐந்தாந் திருவிழா மண்டபப்படி செவ்வனே நடைபெற்றதாகத் தெரியவருகின்றது. செட்டிக்குளத்தில் மூன்றுந்திருவிழாவில் வீரசைவர்களின் மண்டபப்படியும், சிலநாட்களில் மாகேஸ்வராராதனையும் நடைபெற்றனவாம். இவற்றால் தற்காலத்தில் வீரசைவர்களின் முயற்சிகள் பாராட்டப்பெறுகின்றன.

3. பூவாளூர் சைவசித்தாந்த சபை.

இச்சபையின் பத்தொன்பதாவதுஆண்டு நிறைவுவிழா மார்ச்சு 16, 17-உகளில் சென்னை நவசக்திபத்திராதிபர் திருவாளர் **திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்** அவர்கள் தலைமையில் செவ்வனேநடைபெற்றது. காலவேறுபாட்டால் இடையூறுகள் இடையிடையே நேர்ந்தனவாயினும் திருவருட்டுணையாலும், திருமங்கலம் திரு. **மீனாக்ஷிசுந்தர முதலியார்** முதலிய அறிவாளர்களின் அடக்கமுறையானும் முடிவில் இனிது நிறைவேறிற்று. திரிசிரபுரம் பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர் திரு. **ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் பெரியபுராண வாராய்ச்சியை மேற்கொண்டு இக்காலத்தில் புதிது புதிதாகத் தோன்றும் உணர்ச்சிகட்கும், ஒற்றுமைச் சீர்திருத்தங்கட்கும் அடிப்படை பெரியபுராணத்தின்கண்ணேயே அமைந்துகிடக்கின்றனவென ஞானசம்பந்தரது அருட்செயலையும், திருநாவுக்கரசு சுவாமிகளிடம் வேதியராகிய அப்பூதியடிகளார்க்குண்டாகிய அன்பின் கலப்பையும் எடுத்துக்காட்டி உண்மைநிலையைமெய்ப்பித்தார்கள். இவ்வெடுத்துக்காட்டுகளை பகை நொதுமலின்றி ஏற்றுக்கொண்டு நுணுகியாராய்ந்தால் இருபக்கமும் கலாம் பல விளைதற்கிடமில்லாமற்போம். திருவாளர் **சரவண முதலியார்** அவர்கள் வித்தகப்பாடலை விளக்கிக்காட்டியும், திருவாளர் **மா. ரா. குமாரசாமி பிள்ளை** அவர்கள் சேந்தனுரைக்கொண்டு சிவயோகசமாதியைப் பலசுவைப்படப்பரந்து பேசியும் முடித்தார்கள். தலைவர் தங்கொள்கையைத் திறமையுறப்பேசி முடிவுசெய்தனர். உபசார மொழியுடன் சபை யினிது நிறைவேறிற்று.

4. நன்கொடை.

மேலவட்டகை வளையடுப்பு, திருவாளர் பொன்னுசாமி ஐயர் அவர்கள் ஆயுட் சந்தா ரூ. 25-யும் தாம்வாக்களித்தபடி கொடுத்துதவி யுள்ளார்கள். மேட்டுப்பாளயம் போர்டு ஸ்கூலிலிருக்கும் பச்சைப் பெருமாள்பட்டி திருவாளர் அ. குமாரவீரய்யர் அவர்கள் சென்றமாத த்தில் தமதுகுமாரன் சிவலிங்கதாரணஞாபகமாக நமதுபத்திரிகையின் பண்டிற்கு ரூ. 1 அனுப்பியுள்ளார்கள். இவ்விருவர்க்கும் இறைவன் இன்னருளைப்புரிய இக்கழகத்தார் வேண்டுகின்றார்கள்.

5. வீரசைவ சமயாசாரியார் ஜயந்தி.

சமயாபிமானிகளே! ஜயந்தி என்பது (மதாசாரியர்களின்) பிறந்தநாள் கொண்டாட்டம். ஸ்ரீஜயந்தி, சங்கரஜயந்தியை வைஷ்ண வர்களும் ஸ்மார்த்தர்களும் கொண்டாடிவருகின்றார்கள். நாமோ நமது சமயாசாரியர்களின் ஜயந்தியைக் கொண்டாடி அவர்கள் பெருமையை வெளிப்படுத்தாது உறங்கிக்கொண்டிருந்தோம். அதன்பயனாக தேச சரித்திரங்களிலெல்லாம் காலத்தானும் பிந்திய சங்கரர், இராமாநுஜர், மாத்துவர் முதலியவர்களுடைய வரலாறுகளும் அன்னார் செய்தபாஷி யங்களும் எழுதப்பட்டுவர, எவ்வகையானும் முந்திய ஸ்ரீ இரேணுக பாஷியமும் அதற்குக் கருவியான சிவசூத்திரமும், வியாச சூத்திரத் திற் கெழுதிய நீலகண்டபாஷியம், ஸ்ரீகரபாஷியம், ஸ்ரீகண்டபாஷியம் முதலியவைகள் எழுதப்பெறுமல் மறைபடவும் மறக்கவும்நேர்ந்தன. இனியாயினும் விழித்தெழுந்து காலந்தவறாது ஜயந்தியைக் கொண் டாடி ஆசாரியர்களின் பெருமையைப் புலப்படுத்தல்வேண்டும். இவ் வருடம் மாசியில் சிவராத்திரியன்று ஸ்ரீ பண்டிதராத்தியர், விஸ்வாரா த்தியர் ஜயந்தியும், பங்குனி-மீ 12-உ ஸ்ரீஇரேவணாராத்தியர் ஜயந்தி யும் மகாசங்கத்தின் சார்பாக முசிறி வீரசைவ நிலயத்திலும், திருத் தலையூர் இலிங்கய்யர் அவர்கள் இல்லத்திலும் கொண்டாடப்பெற்றன. பெங்களூர் முதலிய வடநாடுகளிலும், நாமகிரிப்பேட்டையிலும் நடை பெற்றதாகவுந் தெரியவருகின்றது.

இஃதன்றித் தாவரங்களினும் ஞானத்தலங்களில் மேற்குத் துவாரமாகச் சத்தியோசாதத்தில் பூசிக்கும்படிக்கூறியுள்ள பூர்வசைவ பத்ததிகளும் உண்டு. அதன் விவரமனைத்தும் அந்தந்தத் தலங்களிற் சென்று தரிசித்து ஆராய்ந்தறிக. அன்றியும் பூர்வ சைவரினும் முத்தியை வேண்டினோர் அவ்வாறு ஆன்மார்த்தத்திலும் மேற்குத்துவாரத்திலிருந்து சத்தியோசாத முகத்திற் பூசிப்பர் என்பதும் உண்மையே.

'நாடரிய, என்று சிறப்பித்தவதனால் முத்தியைக்கொடுக்குந் தன்மையது ச்த்தியோசாத முகமென்றும், முத்தியின்கண் விருப்பமுடையவர்க்கேயன்றி காமியத்தையவாவும் ஏனையரால் அறிதற்கருஞ் சிறப்பினையுடையதென்றும், வீரசைவர் தம் கரபீடத்தில் எழுந்தருளச்செய்து எதிர்முகமாகச் சத்தியோச்சாத முகத்திற் பூசிப்பரென்றும் அறியும்படிக் கூறியதாயிற்று. இவ்வுண்மையைச் சற்குருவால் அறிந்துணராத வீரசைவரிற் சிலர் சிறுபான்மையாகச் சடுஸ்தலத்திற்கூறிய சமர்ப்பண விதியை மேற்கொண்டு தாம் பின்னிருந்து தற்புருட முகத்திற் பூசிப்பதும், அன்றி, அபிடேகம் ஓர்முகத்தினும், தீபம் ஓர்முகத்தினும், நைவேதனம் ஓர்முகத்தினுமாக இப்படிப் பல்வகையாகப் பூசிப்பர். அவர்கள், எதிர்முகமாகச் சத்தியோசாதத்திலே எல்லாவற்றையுஞ் செய்யின் ஐந்து முகங்கட்கும் திருப்தியாமென்பதை அறிந்திலர்கள்போலும். ஆதலான் இதன் விவரமனைத்தும் **சோமநாத ஆராத்தியர் பத்ததியில்** அறிந்துணர்ந்து பூசிப்பதே நெறியாமென்றும் உணர்க.

ஆகமோற்பவ வகைகளும், அவற்றில் விதிக்கப்பெறும் விதிமார்க்கம் பக்திமார்க்கம் என்னும் இரண்டானும் முத்தியுண்டென்பதும் விளக்கியது இது. (உ)

நவிற்றலரு மிதயமிளிர் கண்டநா வடிபுருவ
நடுவுபிர மப்புழையெனு
நல்லிடத் தகராதி கிரியாதி மனமுதல
நண்ணியு மைம்முவகை
யிவற்றிலோவ் வோன்றகல நின்றவிட யங்களேதிர்
வின்றிச்சி வாகாரமா
யெதிருநன வுஞ்சோக மேன்றபா வித்தலறு
மென்கனவு ஞாதுருவோடே
யுவப்பறிவு ஞேயமேன வுற்றனுப வித்தி
மோண்சுழுத் தியுஞானமே
யோளிர்துரிய முந்திலைத் துயர்சிவா னந்தநகர்
வுறுமதீ தமுமாகுநல்
லவத்தைகள் கடந்தவற் றப்புறப் படுமமல
னபிடேக மாடியருளே
யறிவுற்றே னங்கைமலர் சேமிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்.) நவிற்றல் அரும் - (இத்தன்மைத்தென்று) சொல்லுதற்கருமைமான,— இதயம் - (சாக்கிரத்தானமான) இதயமும்,— மிளர் கண்டம் - விளங்குகின்ற (சொற்பனத்தானமான) கண்டமும்,— நாஅடி - (சுழுத்தித்தானமான) நாவின் அடியும்,— புருவ நடுவு - (துரியத்தானமான) புருவத்தின்நடுவும்,— பிரமப்புழை - (துரியாதீதத்தானமான) பிரமரந்திரமும்,— எனும் - என்றுசொல்லப்படும்,— நல்இடத்து - 1 நின்மல அவத்தைகட்குரிய ஐந்திடத்திலும்,— அகராதி - 2 அகரமுதலான ஐந்தக்கரங்களும்,— கிரியாதி - 3 கிரியா

1. அவஸ்தை:— அசுத்தாவஸ்தை, சுத்தாவஸ்தை என இருவகைத்து.
அவஸ்தைகளைந்து:— சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதிதம் என்பன.
அவஸ்தைக்குரிய தானங்கள்:— இதயம், கண்டம், நாவடி, புருவமத்தி, பிரமரந்திரம்.

2. அகரமுதலைந்தக்ஷரங்கள்:— அகரம், உகரம், மகரம், நாதம், விந்து என்பன.

3. ஐந்து சக்திகள்:— கிரியாசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி, பராசக்தி.

சத்தி முதலான ஐந்து சத்திகளும்,— மனமுதல - மனம்முதலான ஐந்துகரணங்களும், நண்ணியும் - அக்கரம், சத்தி, கரணம் என மும் மூன்றாகப் பொருந்தியும்,— ஐம்மூவகை இவற்றில் - ஐந்து ஐந்தாக வுள்ள அக்கரம், சத்தி, கரணம் என்னும் மூன்றனுள்,— ஒவ்வொன் றகல - இதயத்தில் அகரமும் கிரியாசத்தியும் மனமும் நீங்க,—நின்ற விடயங்கள் எதிர்வுஇன்றி - (இவை நீங்குமுன்னர் எதிர்ப்பட்டு) நின்ற சப்தாதி விடயங்கள் எதிர்ப்படுதலின்றி,— சிவாகாரமாய் எதி ரும் நனவும் - சிவம் ஒன்றுமே எதிர்முகமாகி உள்ளும் புறம்பும் ஒழி வற எங்கும் நிறைவாகத்தோன்றும் சாக்கிராவத்தையும்,— சோகம் என்று பாவித்தல் உறும் என் கனவும் -(இதற்குமேல் கண்டத்தானத் தில் உகரமும் இச்சாசத்தியும் புத்தியும் நீங்க, அங்ஙனம் எதிர்ப்படு தலுமின்றி) அதுவேதானென்று பாவிக்கும் சோகம்பாவனைவந்து பொருந்தும் என்று சொல்லப்படும் சொற்பனவத்தையும்,— ஞாதுரு வொடு உவப்பு அறிவு ஞேயம் என உற்று - (இதற்குமேல் நாவின் அடித்தானத்தில் மகரமும் ஞானசத்தியும் ஆங்காரமும் நீங்க,) ஞாது ருவாகிய காண்பானுடன் மகிழ்ச்சியைத்தரும் அறிவாகிய காட்சியும், ஞேயமாகிய சிவமென்னும் பொருளும் என மூவகைப்பட்டு,—அனுப வித்திடும் ஒண்சுழுத்தியும் - அனுபவிக்கும் ஒளிபொருந்திய சுழுத்தி யவத்தையும்,— ஞானமே ஒளிர்துரியமும் - (இதற்குமேல் புருவமத் தியில் விந்துவும் ஆதிசத்தியும் சித்தமும்நீங்க) ஞானமயமாகநின்று விளங்கும் துரியாவத்தையும்,— திளைத்து உயர் சிவானந்தம் நுகர்வு றும் அதீதமும் - (இதற்குமேல் பிரமரந்திரத்தில் நாதமும் பராசத்தி யும் உள்ளமும் நீங்க, ஆன்மபோதங்கெட்டு அப்பொடு கலந்தஉப்பே போல) சிவத்தில் இரண்டறக்கலந்து, (காண்பானும் காட்சியுமற்று) உயர்ந்த சிவாநந்தத்தையே புசித்திருக்கும் துரியாதீதமும்,— ஆகும் நல் அவத்தைகள் - ஆகிய நின்மலாவத்தைகள் ஐந்தையும்,—கடந்து- நீங்கி,— அப்புறப்படும் - அவற்றிற்கு அப்புறமான துவாதசாந்தப் பெருவெளியில் வெறுஞ்சூனியமாகநிற்கும்,— அமலன் - என்றும் இயல்பாகவே மும்மலங்களினின்றும் நீங்கிய எமது இறைவனே !,— அபிடேகம் ஆடியருள் - யான் செய்யும் அபிடேகத்தை ஏற்றுக்கொ ண்டருள்க என்றபடி. 'அறிவுற்றெ னங்கைமலர் செறிவுற் றமர்ந்த இறை, என்பதற்கு முதற் செய்யுளின்கண் உரைத்தாங்குரைத்துக் கொள்க.

இது, நின்மலாவத்தைகள் நீங்கும்வகையும், அவற்றைக் கடந்துநிற்கும் சிவத்தின்றன்மையும் கூறியதெனவுணர்க. அவத்தை - அவஸ்தை யென்னும் வடசொற்றிரிவு. நல்லவத்தை, நல்லிடம்எனவே, அவை நின்மல அவத்தை, நின்வல அவத்தைகட்குரிய இடம் எனப் பொருள் கொள்ளலாயின. இதன்கண்அறிவுடையார் இன்றியமையாது அறிதற்பாலனவாகிய நின்மல அவத்தைக்குரிய தானங்களும், அவற்றுள் அமைந்த தத்துவங்களும், அவைமுறையே நீங்கும்வகையும், நீங்கினவிடத்து நிற்கும் இறைவனது உண்மை நிலையும் கற்பனையின்றி விளக்கப்பெற்றமையால், இச்செய்யுள் இயற்கை நவிற்சியணியின்பாற்படுமெனவறிக.

நின்ற விடயங்கள் எதிர்வின்றிச் சிவாகாரமாயெதிரும் நனவும் என்றது, நின்மல சாக்கிரத்தானமான இதயத்தில் அகரமும், கிரியா சத்தியும், மனமும் நீங்குமுன்னர் எதிர்ப்பட்டு நின்ற விடயங்களாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தங் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) கள் ஐந்தும் நீங்கவே இவற்றுக் காதாரமான ஐம்பொறிகளும் ஒழியும்; இந்தஞானேந்திரியங்களும் ஒழியவே இவற்றிற்கினமான கன்மேந்திரியங்களும், தனது காரியமான தன்மாத்திரைகளும்ஒழியும் இவ்விரண்டுவித இந்திரிய விடயங்களும் ஒழியவே இவற்றிற்கு முதன்மையாய் நின்ற பஞ்சபூதங்களும் ஒழியும்; இவை யொழியவே இவற்றின் பஞ்சிகரணக்கூட்டமாகிய தேகாதிப்பிரபஞ்சங்களும் ஒழியும்; இப்பிரபஞ்சந் தோன்றுதொழியவே சிவமென்னுஞ் செம்பொருளே எங்கும் வியாபகமாய்க் காணப்படுதலே நின்மல சாக்கிராவத்தையென விளக்கியதென்க.

இந்த அவத்தைகளைப்பற்றிப் பல நூலாசிரியர்கள் பல்வேறு வகையாகக்கூறுவர்; அவற்றினுண்மைகளை அறிவுடையார் அநுபவத்தாலாராய்ந்துணர்க. அவைவருமாறு :— ஆன்மாவானவன் புறக்கரணம் அகக்கரணமாகிய இரண்டினுங் கூடியிருக்கிற தன்னை யறிவது நின்மல சாக்கிரமென்றும், புறக்கரணத்தைவிட்டு அகக்கரண வியாபாரத்துடனே கூடித் தன்னையறிவது நின்மலசொற்பனமென்றும், அந்த அகக்கரண வியாபாரத்தைவிட்டுப் போகங்களில் விருப்புமின்றி அசைவற்ற மனதுடன் கூடியிருப்பது நின்மல சுழுத்தியென்றும், மனத்தையும்விட்டு சித்தாகிய ஞானத்துடன் கூடியிருப்பது நின்மல துரியமென்றும், அதற்கு மேலாய் நிரஞ்சனமாய் ஸ்வசம்வேத்தியத்திற்

வீரசைவம்.

புரவலர் :—

பொம்மபுரம் ஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள் அவர்கள்.

நிறைவேற்றக் கழகத்தார் :—

க. திருவாளர் ஆ. பொன்னுசாமி ஐயரவர்கள், சிதம்பரம்.
உ. ,, C. வைத்திலிங்க ஐயரவர்கள், பெருவளநல்லூர்.
ங. ,, சிவப்பிரகாச ஐயரவர்கள், அரும்பாவூர்.
ச. ,, S. வேலாயுத ஐயரவர்கள், சொரத்தூர்.
ரு. ,, V. குமாரவீரய்யர் அவர்கள், முசிரி.

பத்திராசிரியர் :— வீ. குமாரவீரய்யர்.

கட்டுரையெழுதிக் காப்பதாக வாக்களித்துள்ள ஆசிரியர்கள்.

திருவாளர் G. C. வீரப்பா B. A. L. L. B., அவர்கள்,
வழக்கறிஞர், பெங்களூர்.

,, உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
ஸ்ரீமத் ஞானியார் பாடசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

,, பண்டிதர், ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்,
பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,
திரிசிரபுரம்.

,, பண்டிதர், அ. கந்தசாமி பிள்ளையவர்கள், கவர்ன்மெண்டு
காலேஜ் தமிழ் விரிவுரையாளர், கும்பகோணம்.

,, ஏகாம்பர ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பர் உயர்தர கலாசாலை, காஞ்சீபுரம்,

,, வித்துவான் அ. வரதநஞ்சய பிள்ளை அவர்கள்,
ஸ்ரீகருணீக புராண நூலாசிரியர், ஜலகண்டபுரம்.

நமது சந்தாநேயர்கட்கோர் விண்ணப்பம்.

சமூகமுன்னேற்றைத்தைக் கருதுஞ் சன்மார்க்க சீலர்களே!

இப்பொழுது நமது பத்திரிகையின் 4-வது இதழும் வெளிவருகின்றது. மற்றய பத்திரிகைகட்குத் தொண்டர்கள் பலர் வெளியேறி ஆங்காங்கு சந்தாவை வசூலிப்பார்கள். நமது பத்திரிகைக்கோ வீரசைவர்க ளனைவரும் சமூக முன்னேற்றத்தைக்கருதித் தொண்டர்கள் செய்யும் பணியைச் செய்வார்களெனத் துணிந்தே சிலரைமாத்திரம் தொண்டர்களாக ஏற்படுத்தாதுவிடுத்தோம். ஆதலின் ஒவ்வொருவரும் ஆங்காங்கு சந்தாதாரர்களைச் சேர்க்கவும், பணத்தை வசூலித்தனுப்பவும் முன்வருவீர்களென வேண்டுகின்றோம். V. P.-ல் அனுப்பினால் ரூ. 2—5—0 ஆகின்றது. மணியார்டர் செய்தால் இரண்டணாச் செலவில் முடியும். புதுப்பேட்டை நீலகிரியிலுள்ள வீரசைவர்கள் தாமாகவே விசாரித்து முன்பணமாக மணியார்டர்செய்து பத்திரிகையைப் பெற்று மகிழ்கின்றார்கள். மரியாதைக் கிரமமாக அனுப்பப்பட்ட சிலர்மாத்திரம் இன்னும் கவனிக்காமலிருக்கின்றார்கள். 5-வது இதழை V. P-ல் நிச்சயமாக அனுப்பக் கருதியிருக்கின்றோமாதலால் அதற்குள் மணியார்டர் மூலம் அனுப்பினவர்களைத்தவிர மற்றவர்கள் V. P.-ல் பெற்றுக்கொள்ள எண்ணியிருக்கிறார்களென நம்பப்படுவார்கள். சிலர் புதிதாகச்சேர்ந்தும் ஆயுட்சந்தா ரூ. 25-ம் செலுத்திவருகின்றார்கள். சந்தாநேயர்களே! தயைசெய்து எங்கட்கு அதிக வேலையைக் கொடுக்காது சந்தாவை அனுப்பி உங்கள் பத்திரிகையை ஆதரிப்பீர்களென வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,

நிறைவேற்றுக்கழகத்தார்.

வீரசைவ மகாசங்கத்தின் தலைவர்

திருவாளர் ஆ. பொன்னுசாமி ஐயர் அவர்கள்

இவர் விருத்தாசலம் தா. குமாரமங்கலத்தில் ஆறுமுகஐயர் அவர்கள் தவப்புதல்வராகத்தோன்றி, சிதம்பரத்தில் ஆங்கிலம் பயின்று, கடற்றுறை ஆய்வுகெறிப் பரிசோதகராய் அமர்ந்து, ஓய்வுநேரங்களில் புலிசை ஞானியார் மடாலயம் ஸ்ரீமத் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள்பால் தமிழ் இலக்கியங்களைக்கற்று, உத்தியோகத்தில் ஓய்வுபெற்று, பொம்மபுரம் பெரியமடத்தின் காரியஸ்தராயிருந்து 1927-ல் மகாசங்கத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். கற்றுங் கொழுகுங் கடப்பாடுடையவர். சிதம்பரம் பாலையர் மடத்தில் 11-3-29-ல் இத்தக்கார் 61-வது வயதில் சிவலிங்கைக்கியமாயினார். இவரது ஆத்மா சாந்தியடையவும், இவரது பத்தினியார் முதலியோர் ஆறுதலடையவும் இக்கழகத்தார் இறைவனருளை வேண்டுகின்றனர்.